# செந்தமிழ்

தொகுதி 80 டிசம்பர் 1986 பகுதி IV

மதுரைத் தமிழ்ச்சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

— உள்ளே —

குறள் நீதியும் சதக நீதியும்
—டாக்டர் மு. பழனியம்மாள்

அறிவியல் வினா - விடை
— திரையன்

நீர் சொல்லும்
— அசாமி

மதுரைத் தமிழ்ச்சங்கம் - மதுரை - 1.

ஆசிரியர் : என். எஸ். முத்துமலைச்சாமி பி. ஏ. பி. எல்.

# செந்தமிழ்

தொகுதி 80 டிசம்பர் 1986 பகுதி IV

உள்ளே

| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | |
| 1. | குறள் நீதியும் சதக நீதியும் — டாக்டர் மு. பழனியம்மாள் | 1 |
| 2. | அறிவியல் வினா - விடை — திரையன் | 8 |
| 3. | நீர் சொல்லும் — அசாமி | 27 |
| 4. | ஆன்மீக வெற்றியினை எப்படிப் பெறுவது? | 28 |
| 5. | கடல் கடந்த கண்ணன் — பி. ஆர். ஸ்வாமி | 29 |
| 6. | நூல் மதிப்புரை | 36 |
| 7. | மொழி பெயர்க்கும் தொலைபேசி | 35 |
| 8. | சங்கச் செய்திகள் | 41 |

பொறுப்பாசிரியர் டாக்டர் பழநி. அரங்கசாமி

# குறள் நீதியும் சதக நீதியும்

டாக்டர் மு. பழனியம்மாள்,

**திருக்குறள்:** அறிமுகம் வேண்டாத நீதி நூல் திருக்குறள். அதிற் கூறப்பெறும் நீதிநெறிகள் உலகத்தாரனைவராலும் மொழி, இனம், சாதி, சமய நிற வேறுபாடின்றி எக்காலத்தும் ஏற்கும் வகையில் அமைந்திருப்பதால் உலகப் பொதுமறை எனப்போற்றப் படுகிறது.

**சதகங்கள்:** சிற்றிலக்கிய வகைகளில் ஒன்று சதக இலக்கியங்கள்.

"பல திறப்பட்ட நீதிநூல்கள் பதினைந்தாம் நூற்றாண்டு முதற்கொண்டு இன்றுவரை தமிழில் இயற்றப்பெற்றுள்ளன. அவற்றுள் வடமொழி இலக்கிய மரபைப் பின்பற்றி இயற்றப்-பட்ட சதகங்கள் சிறப்புடையனவாகும். மனித வாழ்க்கைக்குப் பயன்படும் நீதிக்கருத்துக்களை எடுத்து உரைப்பதையே அவை சிறந்த குறிக்கோளாகக் கொண்டுள்ளன."[1]

**ஒற்றுமை:** "மக்கள் வாழ்வில் நன்மை பெருகவும், தீமை குறையவும் சான்றோர் விரும்புகின்றனர். அவ்விருப்பம் செயலாக மாறுதற்குத் தங்கள் எண்ணங்களை நூல் வடிவில் சிலர் அளித்துச் சென்றனர். சிலர் சொல்வடிவில் கூறிச்சென்றனர். எழுத்தும் கூற்-றும் அறநூல் வடிவில் மக்கள் வாழ்வில் நலமூட்ட முயல்கின்றன."[2] அம்முயற்சியின் பொன்முடியாகவும், பொதுவாழ்வின் இலக்கணமா கவும் குறள் விளங்குகின்றது. வள்ளுவர் தம்நூலில் மக்கள் வாழ் விற்கு வேண்டிய நீதிநெறிகளை இறைவாழ்த்தோடு தொடர்ந்து கூறியுள்ளார். சதக இலக்கியங்கள் இறைவனை முன்னிலைப் படுத்தி மக்கள் நன்னெறியில் வாழ்வதற்குரிய அறிவு நெறிகளை யும், அறக்கருத்துக்களையும் விரித்துக்கூறுகின்றன. அவைகள் உலக மக்கள் எல்லோராலும், எக்காலத்தும் ஏற்கும் வகையில் அமைந்திருப்பதால் உலகப் பொதுமறையாம் திருக்குறளோடு, ஈண்டு ஒப்பிட்டு ஆராயப்பட்டுள்ளன.

**உலகப் பொது நீதிகள்:** "காலத்திற்கும், இடத்திற்கும், மரபிற்கும் ஏற்பச் சில செயல்கள் பலராற் போற்றப்படலாம். தூற்றவும் படலாம்."[3] அவ்வகையில் திருக்குறளில் கூறப்பட்டுள்ள

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீரபிற" — (34)

என்ற நீதி உலகோர் அனைவராலும் ஏற்றுக்கொள்ளத்தக்கது. மனிதர்கள் எந்நாட்டவராயினும், எச்சமயத்தவர் ஆயினும், எம்மொழியினராயினும், எக்காலத்தவராயினும் மனத்தால் மாசற்று இருப்பதே அறம் என்று கூறப்பட்டுள்ள நீதி உலகமக்கள் யாவராலும் ஏற்கும் வகையில் அமைந்துள்ளது. ஆனால் நீதிநெறிகளுள் ஒன்றான 'மது அருந்தக் கூடாது' என்ற நீதியை உலகப் பொது நீதி எனக்கூற இயலாது. ஏனெனில் "எந்தக் காலத்திலும் சட்டங்களும், கட்டுப்பாடுகளும் சமுதாயத்தால் விரும்பி ஏற்கப்படுவன அல்ல".[4] சங்ககாலத்தில்,

"சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணுமன்னே"[5]

என்று கள்ளுண்டல் போற்றப்படுகிறது. ஆனால் இக்காலத்தில் 'குடி குடியைக் கெடுக்கும்' என்று தூற்றப்படுகிறது. மதுக்குடியால் நோயுற்று வருந்தியவன் இந்நீதியை வரவேற்பான். உடல் நலத்திற்கென மதுவை அருந்தியவன் இந்நீதியை அவமதிப்பான். வரவேற்பவனுங்கூட வருந்துகின்ற காலத்தில் மட்டுமே வரவேற்பான். அதனால் 'மது அருந்தக் கூடாது' என்ற நீதியை உலகப் பொதுநீதி எனக்கூற இயலாது. இவ்வாறு சிலர் ஏற்கும் வகையிலும் சிலர் ஏற்க மறுக்கும் வகையிலும் அல்லாமல் எந்நாட்டினரும், எக்காலத்திலும் ஏற்றுக்கொள்ளத்தக்க நீதிகள் இவண் உலகப் பொது நீதிகளாகக் கூறப்பட்டுள்ளன.

**நன்மையுந்தீமையும் :** இவ்வுலகம் நன்மையுந்தீமையும் கலந்தது. நன்மை இருக்குமிடத்தில் தீமையும் உண்டு. இதனை,

"மடுவினிற் கஞ்சமல ருண்டொருவ ரணுகாமல்
வன்முதலை யங்கிருக்கும்
மலையினிற் றேனுண்டு சென்றொருவர் கிட்டாமன்
மருவியதில் வண்டிருக்கும்
நெடுமைதிகழ் தாழைமல ருண்டொருவ ரணுகாம
னீங்காத முள்ளிருக்கும்

நீடுபல சந்தன விருக்ஷமுண் டனுகாது
நீளரவு சூழ்ந்திருக்கும்
குடிமல்கி வாழ்கின்ற வீட்டினிற் செல்லாது
குரைநாய்க ளங்கிருக்குங்
கொடுக்குந்தி யாகியுண் டிடையூறு பேசுங்
கொடும் பாவி யுண்டு கண்டாய்''- குமரேச. 55

என்ற குமரேச சதகப்பாடலால் அறியலாம். நீதி நூல்கள் நன்மையைக் கண்டவிடத்து இதனைச் செய்க என்றும், தீமையைக் கண்டவிடத்து இதைச் செய்யற்க என்றும் அறிவுறுத்தும் இயல்புடையன. ஆதலால் திருக்குறளில் போன்று சதக நூல்களிலும் மக்கள் செய்ய வேண்டிய நீதிகளும், செய்யத் தகாத நீதிகளும் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளன. மேலும் இதனைச் செய்யின் இன்ன பயன் விளையும் என்றும் இதனைச் செய்யாது விடினும், செய்யத்தகாத இதனைச் செய்யினும் இன்ன தீமை விளையும் என்றும் இருநூல்களும் எடுத்தியம்புகின்றன.

**செய்யவேண்டிய நீதிகள்:** மக்கள் செய்ய வேண்டிய நீதிகளாக, அறஞ்செய்தல் வேண்டும், பொருள்தேட வேண்டும், கற்றல் வேண்டும், காலத்தில் உதவி செய்தல் வேண்டும், இன்சொற் கூற வேண்டும், நல்லோர் நட்பு வேண்டும், நடுவு நிலைமை வேண்டும், மானத்துடன் வாழ வேண்டும், அடக்கம் வேண்டும் ஆகியன விளக்கப்பட்டுள்ளன.

அறஞ்செய்தல் வேண்டும்: "அறம் யாவர்க்கும் உரியது. வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும் கடைப்பிடிக்க வேண்டியது. அரசர், அமைச்சர், பிற அரசியலலுவலர், வீரர், வணிகர், உழவர் முதலிய பல திறத்தவர்க்கும் உரியதே, செல்வர்க்கும், வறியோர்க்கும் பொதுவானதே: பிற அனைத்தையும் துறந்தோரும் அறத்தைத் துறக்குமாறில்லை".[6] ஆதலால்

"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாஞ் செயல்" — (33)
"அன்றறிவோம் என்னா தறஞ் செய்க" — (36)

என்று வள்ளுவர் ஆணையிடுகின்றார். ஏனெனில்,

"அறத்தினூஉங் காக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு" — (32)

ஆதலால் இம்மை வாழ்வும், மறுமை வாழ்வும் வளம் பெற வேண்டுமானால் அறஞ்செய்தல் வேண்டும். உலகில் உடம்பெடுத்த-தன் பயன் அறஞ்செய்தலாகும் என்ற கருத்தினை,

"மண்ணில் வெகு தருமங்கள் செயவேண்டு முயர் மோக்ஷ
வழி தேட வேண்டுமின்றி
வறிதிற் புதைத்துவைத் தீயாத பேர்களே
மார்க்க மறியாக் குருடராம்', - அறப்ப 7 : 9-12.

என்று அறப்பளீசுர சதகம் அரண் செய்கிறது. இவ்வடிகளில் அறத்தின் பயன் வீடடைதலே என்று வள்ளுவக் கருத்துப் புலனாகின்றது. அதோடு பொருளைப் பதுக்கி வைத்துப் பிறருக்கு ஈயாத உலோபியரை, வீட்டுவகை அடைவதற்கு வேண்டிய நெறியறியாக் குருடர் எனச் சதகப் புலவர் சாடியிருப்பது வள்ளு-வத்தையும் விஞ்சி நிற்கின்றது. மேலும், அறத்தினால ஆக்க-முண்டு என்பதை'' முற்பிறவியில் அறங்கள் செய்திருந்தால் கானகத்தில் வாழ்ந்தாலும் பல நன்மைகள் தேடி வரும். அறஞ்செய்யா-விடில் பொன்மலையில் வாழ்ந்தாலும் தீவினைப் பயனால் யாவும் கெடும்'' என்று சுமதி சதகமும் அறன் வலியுறுத்துகின்றது. எனவே, ஒருவர் செய்யும் அறம் பிறவி தோறும் தொடர்ந்து வரக்கூடியதும், வீட்டுலகை அடைவதற்கு வழியுமாக இருப்ப-தால் மக்கள் அறஞ்செய்தல் வேண்டுமென இரு நூல்களும் வற்புறுத்துகின்றன'

**பொருள் தேட வேண்டும் :** இவ்வுலக வாழ்விற்கு அடிப்-படை பொருள். அரசன் முதல் துறவிகள் வரை எல்லோராலும் விரும்பப்படுவதும், வேண்டப்படுவதும் பொருள். பொருளின்றி வாழ்வில்லை என்பதை வள்ளுவர்,

"பொருளில்லார்க் கிவ்வுலகம் இல்லை'' — (247)

என்று உணர்த்துகிறார். அதனாற்றான்,

"செய்க பொருளை'' — (759)

என ஆணையிடுகின்றார். உலகில் தோன்றிய ஒவ்வொரு மனி-தரும் முயன்று பொருளைத் தேட வேண்டும். பொருளீட்டும் உரிமை எல்லோருக்கும் உண்டு. ஆனால் அப்பொருளை அற-வழியிலேயே பெறவேண்டும் என்பது வள்ளுவர் வாய்மொழி. அறப்பளீசுர சதகமும்,

"புண்ணிய வசத்தினாற் செல்வமது வரவேண்டும்
பொருளை ரட்சிக்க வேண்டும்
புத்தியுட னதுவொன்று நூறாக வேசெய்து
போதவும் வளர்க்க வேண்டும்" — அறப்ப : 7
"வளைகட றிரிந்துபொரு டேடவேண் டுந்தேடி
வளரறஞ் செய்ய வேண்டும்" — அறப்ப ; 13 : 3 - 4.

என்ற அடிகளில் பொருளைப்பெற வேண்டிய வழிகளையும், செலவு செய்ய வேண்டிய முறைகளையும் புலப்படுத்தியுள்ளது. அறவழியில் தேடிய பொருளை அறத்திற்கே செலவு செய்ய வேண்டும் என்பதே இரு நூலாரின் கருத்துமாகும்.

**கற்றல் வேண்டும் :**

கேடில் விழுச்செல்வமாகிய கல்வியை வலியுறுத்தாத நூல்கள் இல்லை எனலாம். தொல்காப்பியர் காலத்திலேயே தலைவன் தலைவியருக்கு இருக்க வேண்டிய பத்துப்பொருத்தங்களில் கல்வியும் ஒன்றாகும் என்பதும், கல்வியின் பொருட்டுத் தலைவன் பிரிந்து சென்றான் என்பதும் தொல்காப்பியத்தினால் அறியலாகும் செய்திகளாகும். இக்கல்வியின் மேன்மையை,

"அறிவுடையோனா றரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனுமவன் கட்படுமே"7

என்று புறப்பாடலும் தெளிவுறுத்துகின்றது. காரணம் கல்வி கற்பதால், அறிவு வளர்கிறது.அவ்வறிவால் உலகம் ஒன்றென்னும் உணர்வு மிகுகின்றது. இப்பயன் கருதியே வள்ளுவர், உலக மக்கள் ஒவ்வொருவரும் கல்வி கற்க வேண்டும்; கற்பதோடமையாமல் கற்றதை நடைமுறையில் கடைப்பிடிக்க வேண்டும் என்று விரும்பினார். அதனை,

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" — (391)

என்று தம் குறளில் வெளிப்படுத்தியுள்ளார். கற்ற கல்வியும், கேள்வியும் அறிவும் கற்றவனை நல்வழிப்படுத்துவனவாக இருத்தல்

வேண்டும் என்பதே வள்ளுவரின் நோக்கம். இதே நோக்கமுடைய சதகப் புலவரும்,

> "வாலிபந் தனில்வித்தை கற்க வேண்டுங் கற்ற
> வழியிலே நிற்கவேண்டும்

என்று பாடியுள்ளார். கற்ற வழியிலே நிற்க வேண்டும் என்று கூறியிருப்பதால் வித்தை என்ற சொல் கல்வியைக் குறித்தலே-யாகும். கல்வி ஒருவனை நல்வழிப்படுத்துகின்றது. மேலும் "அது பொருட் செல்வத்தைப் போலின்றி என்றும் அழியாத பேரின்-பத்தைக் கொடுக்கும், அள்ளிக் கொடுக்கக் குறையாமல் வளரும். என்றென்றும் அழியாது. கல்விச் செல்வர்களுக்குப் பொருட்-செல்வர்களாகிய அரசர்களும் ஈடாக மாட்டார்கள்" என்று பர்த்ருகரி நீதிச் சதகம் கல்வியின் மேன்மையை விளக்குவதின் வாயிலாகக் கல்வியின் இன்றியமையாமையை வலியுறுத்துகின்றது.

**காலத்தில் உதவி செய்தல் வேண்டும் :**

எவ்வகையிலேனும் பிறருக்கு உதவி செய்தல் வேண்டும். ஆனால் அவ்வுதவியைப் பிறருக்குப் பயனளிக்கும் காலத்தில் செய்தல் சாலச்சிறந்ததாகும். இதனை வள்ளுவர்,

> "காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
> ஞாலத்தின் மாணப் பெரிது" — (102)

என்ற குறளில் விளக்கியுள்ளார். தாம் செய்வது சிறிய உதவியா-யினும் அதை உற்ற காலத்தில் செய்தால் பெரிய உதவியாகக் கருதப்படும். அதனால் செய்யும் உதவியைக் காலமறிந்து செய்-தல் வேண்டும் என்பதை விநாயகர் சதகம்,

"கோடை காலத்தில் நீர், குடை, விசிறி முதலியன கொடுப்பவன் புண்ணியசாலி. பசிக்குறிப்பினை அறிந்துஉணவளிப்-பவன் புருடரத்தினமாவான். தாழ்ந்த குடிவளரத் தாங்கியவன் புருடசிங்கம். குளிர் காலத்தில் மகிழ்ந்து ஆடை கொடுப்பவன் வள்ளல்" - (விநா .55)

என்ற கருத்தின் வாயிலாகத் தெளிவுறுத்துகின்றது. காலத்திற்கு ஏற்ற உதவிகளைப் பிறர் குறிப்பறிந்தும், தேவை அறிந்தும்

தாமே மனம் விரும்பிச் செய்தலே சிறந்த அறமாகும். ஏனெனில் பிறர் செய்யாமல் செய்த உதவியை பயன்கருதாது செய்த உதவியாகும். அதனால் கிடைக்கக் கூடிய நன்மையும் கடலினும் பெரிதாகுமாதலால் காலமறிந்து உதவி செய்தலே நன்று.

**இன்சொற் கூற வேண்டும் :**

பிறர் மனம் மகிழ முகம் மலர்ந்து அன்பு கலந்த சொற்களை உள்ளத்திலிருந்து கூறுதல் வேண்டும். அவ்வாறு கூறும் "இன்சொல் ஒருவன் வாழ்வை அழகுபடுத்துவதோடு அறம் பெருகித் தழைக்குமாறும் வழிகோலும், நல்லவை நாடி இனியவை கூறும் வழக்கம் நல்வாழ்விற்கே அடிப்படையாகும்." 8 இன்சொல்லே அறமாகும் என்பதை வள்ளுவர்,

"இன்சொலினதே அறம்" — (93)

என்று சுட்டியுள்ளார். எனவே "அறச்செய்கை என்பது இன்சொல்லோடும், ஈரத்தோடும், வஞ்சனையில்லாமலும், பணிவோடும் நடைபெற வேண்டும்." 9 என்ற பெரியோர்கருத்தும் இதனை அரண் செய்கின்றது. இன்சொல் இல்லாத நற்செய்கை அது நற்செய்கையேயாயினும் சிறப்பற்றது. ஆதலால் நெஞ்சுவந்து ஒருவற்கு வேண்டிய பொருட்களைக் கொடுத்தலைவிட இன்சொற்கூறுதலே நன்று.

"அகன்அமர்ந் தீதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின்" — (92)

என்ற வள்ளுவக் கருத்தினை,

"கடுகடுத் தாயிரஞ் செய்குவதி லின்சொலாற்
களிகொண் டழைத்தல் நன்று" — (குமரேச. 52)

என்று வழிமொழிகின்றார் சதகப்புலவர் 'அகன்அமர்ந் தீதலின் நன்றே' என்று வள்ளுவர் கூறியிருக்க, கடுகடுத்தாயிரஞ் செய்வதிலும் நன்றே' என்று சதகத்தார் கூறியிருப்பதன் நோக்கம் இன்சொற்கூற இயலாதவர்களால் நெஞ்சுவந்து வேண்டிய பொருளைக் கொடுக்க எவ்வாறு முடியும்? என்ற கருத்தினால் தான். "பொன்னாலான குடையும், ஆடையும், அணிகலன்களும் கொடுப்பது என்ன சிறப்புடையதோ என அறிந்து முகமலர்ச்சியுடன் ஆதரித்து இனிய மொழி கூறுதலே நன்று" (தண்டலை-10) என்ற தண்டலையார் சதகக் கருத்து இன்சொற் கூறுதல் அறஞ்செய்தலை ஒக்கும் என விளக்கி இந்நீதியை மேலும் வலியுறுத்துகின்றது.

—தொடரும்

# அறிவியல் வினா விடை

— திரையன்

1. பறவைகள் எப்படி ஆயிரக்கணக்கான மைல்கள் பறக்கின்றன?

நடுக்கும் குளிர்காலங்களிலோ, கடுமையான வெப்பக்காலங்களிலோ பறவைகள் இடம் மாறுவது உண்டு. ரஷ்யாவில் கடுங்குளிர் இருக்கும்போது சில பறவைகள் செங்கல்பட்டு அருகில் வேடந்தாங்கல் ஏரிக்கு வந்து விடுகின்றன. கூரிய பார்வையும், சாதாரணமான பறக்கும் சக்தியுமே இப்படி ஆயிரக்கணக்கான மைல்களைக் கடந்து செல்ல உதவுகின்றன. ஆங்காங்கே சிற்சில அடையாளங்களை மையமாக வைத்து அவை பறக்கக் கூடும். கடற்கரை ஓரமாகவே பறந்து பிறநாடுகளுக்குச் செல்லும் பறவைகளும் உண்டு. Pigeons, gulls போன்ற பறவைகள் இரவில் விண்மீன்களையும், பகலில் சூரியனையும் பார்த்துத் தாங்கள் செல்லும் திக்கினை நிர்ணயித்துக் கொள்கின்றன என்று கூறுகிறார்கள். வட அமெரிக்காவில் காணப்படும் Golden Plover என்ற பறவை கனடாவிலிருந்து தென் அமெரிக்க நாடுகளுக்குப் பறந்து செல்லும் போது இடையில் 3000கி.மீ. தூரமுள்ள அட்லாண்டிக் கடலையும் கடக்கிறது. காலநிலை மாறுபடும் போதும், உணவுத் தேவையை முன்னிட்டும் பறவைகள் பல்லாயிரக்கணக்கான மைல்கள் பறந்து செல்கின்றன என்பது உண்மையேயாயினும் இத்தகைய மிக நீண்ட தூரத்தை எப்படிக் கடக்கின்றன என்பது பற்றித் தெளிவாகவும் உறுதியாகவும் சொல்ல இயலவில்லை.

2 ஒட்டகம் நாட்கணக்கில் நீரில்லாமல் எப்படி வாழ்கிறது?

ஒட்டகத்திற்குப் பாலைவனக் கப்பல் என்பதும் ஒரு பெயர். தண்ணீர் குடிக்காமலே வாரக்கணக்கில் அது வாழ முடியாவிட்டாலும் பல நாட்கள் நீரின்றியே அது வாழமுடியும். உடம்பு முழுதும் உள்ள தசைநார்களில் தண்ணீர் நிறைந்திருக்கிறது. அருந்திய நீர் உடம்பிலிருந்து வியர்வையாகவும் சிறுநீராகவும் மிகுதியாகக் கழிந்து விடாமல் உடம்பிலேயே தங்கியிருப்பதற்-

கேற்ப ஒட்டகம் உப்பினை நிறையத் தின்னும் பழக்கம் உடையது. வயிற்றின் ஒரு பாகத்தில் தேக்கி வைத்திருக்கும் நீரையே அது பயன்படுத்திக் கொள்கிறது என்பது ஓரளவு உண்மை தான். மிக நீண்ட பாலைவனத்தைக் கடக்க பல நாட்கள் ஆகும். இதற்கு வயிற்றில் உள்ள நீர் மட்டும் போதாது. ஒட்டகத்தின் திமில் (lump) முழுதும் கொழுப்பினால் ஆனது. தனக்கு வேண்டிய உணவுப் பொருளை இத்திமிலில் இருந்தும் ஒட்டகம் எடுத்துக் கொள்கிறது. இது தீர்ந்து விட்டதும் மேற்சொன்னவாறு உடம்பின் (tissue-) களிலிருந்து நீர் உற்பத்தியாகிறது. தசைநார் ஊட்டமாக வளர்ந்துள்ள ஒட்டகங்கள் ஏறத்தாழ பத்து காலன் வரை நீர் உற்பத்தி செய்யும் தகுதி வாய்ந்தவையாகும்.

3. செயற்கைக் கோள் ஆர்யபட்டா என்று ஏன் அழைக்கப்படு-கிறது?

இந்தியாவில் மிகப்பழங்காலத்தேயே வானிலை பற்றி ஆய்ந்தோரில் ஆர்யபட்டர் ஒருவர். கணித நிபுணராக இருந்த இவர் ஞாயிறு, முழுமதி ஆகியவற்றின் விட்டம் எத்துணை நீள முடையது என்று கணக்கிட்டவர். பிரமகுப்தர், வராகமிகிரர் போன்றோர் இவருக்குப் பிற்காலத்தே கோள் நிலை பற்றி ஆய்வு நடத்தியோர். இவர்கள் கி. பி. 12 ஆம் நூற்றாண்டில் குப்தர் காலத்தில் வாழ்ந்தவர். கி.பி. இரண்டாம் நூற்றாண்டினை யொட்டிய தாகக் கருதப்படும் சங்க இலக்கியங்களிலும் வானிலை பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. சங்க மருவிய காலத்தில் இயற்றப்பட்ட சிலப்பதிகாரத்தில் ‘வெள்ளி வாரத்து ஒள்ளெரி உண்ண உரைசால் மதுரையோடு அரசு கேடுறும்’ என்று வரும் பகுதியும் இதனையே வலியுறுத்தும். ஆயினும் வானிலை ஆய்வில் தனிப்பட்டோரைக் குறிப்பிடுவதற்கு இங்கு வாய்ப்பில்லை; எனவே அரசு ஆர்யபட்டரின் பெயரையே புதிய கோளுக்கு இட்டுள்ளது.

தொடரும்

## வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் : — வாழ்க்கைக் குறிப்பு

வி.சு. கோவிந்தன் M A, M. Phil
மதுரைக் கல்லூரி, மதுரை.

பரிதிமாற் கலைஞர் என்று தனது பெயரைத் தமிழாக்கம் செய்து கொண்ட அறிஞரே வி. கோ. சூ. ஆவார் — சுவாமி வேதாசலம் அவர்கள் மறைமலை அடிகள் என்று பெயர் மாற்றம் செய்தது போல். நாடகம், புதினம், கவிதை வரலாறு என்றின்ன பல்வேறு துறைகளிலும் நூல்களியற்றிய வி. கோ சூ. அவர்கள் தமது 32-ஆம் அகவையில் காலமானார். எனினும் காலத்தை வென்று நிற்கும் புலமைக்கும், புகழுக்கும் வயது ஒன்றும் தடையாக இருப்பதில்லை. ஆங்கிலக் கவிஞன் கீட்ஸ் 26-ஆண்டுகளே வாழ்ந்தவன். துன்பியல் நாடகம் எழுதிய கிறிஸ்டபர் மார்லோ 30-ஆம் வயதில் மரணம் அடைந்தவன். எனவே வி. கோ. சூ அவர்களின் நிலைத்த பெருமைக்கு அவரது இலக்கியப் படைப்புக்களே காரணம். அவற்றுள்ளும் அவரது நாடக இயல் — ஒரு தனி முதற் படைப்பு. தமிழ் நாடக இலக்கணங்களின் வெறும் பட்டியலை மட்டும் சொல்லிக் கொண்டிருந்த புலவர் உலகத்தில் பழமையினைப் போற்றி, புதுவனவும் கலந்து நாடக இலக்கணமே தந்தவர் வி. கோ. சூ அந்நூலை தனது ஆய்வுப் பொருளாக எடுத்துக் கொண்டவரும், வி. கோ. சூ. அவர்களின் மகன் வழிப் பெயரருமாகிய இக்கட்டுரை ஆசிரியரது நாடக இயல் பற்றிய கட்டுரை தொடர்ந்து வெளிவரும்.

— ஆசிரியர்

### 1.0 முன்னுரை

"தமிழ் நாடு ஆங்கில மோகத்தில் ஆழ்ந்திருந்த காலத்தில் அருந்தமிழ்ப் புலவர் சிலர் தோன்றித் தமிழை ஆதரித்தனர்.

அன்னவருள் ஒருவர் சூரியநாராயண சாஸ்திரியார் என்னும் பரிதி மாற்கலைஞர்''[1] என்பார் ரா. பி. சேதுப்பிள்ளை. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்து, தமிழ்ப் பணி புரிந்த சூரியநாராயன சாஸ்திரியாரின் வாழ்க்கைக் குறிப்பை இங்கு காண்போம்.

## 1. 1 *பிறப்பும் கல்வியும்*

மதுரை மாநகரின் அருகேயுள்ள விளாச்சேரி என்னும் சிற்றூரில் வாழ்ந்து வந்தவர் கோவிந்த சாஸ்திரியார். அவருடைய மூன்றாவது குழந்தையாகத் தோன்றியவரே சூரியநாராயண சாஸ்திரியார் ஆவார். விளாச்சேரியில், 1870-ஆம் ஆண்டு, ஜூலைத் திங்கள், 0-ஆம் நாள் புதன்கிழமையன்று சூரியநாராயண சாஸ்திரியார் பிறந்தார்.

சூரியநாராயணன் தமிழ்ப்பள்ளியில் சேர்ந்து தமிழும் ஆரம்பக் கணிதமும் பயின்று தம் தந்தையாரிடம் வடமொழியை வரன்முறையாகக் கற்றார். 1880-ஆம் ஆண்டில் பசுமலைக்கல்லூரியில் சேர்ந்து, கல்வி கற்றார். அதன்பின்னர், மேற்படிப்பை முன்னிட்டு மதுரை நகரிலிருந்த ஜில்லா உயர்நிலைப்பள்ளியில் (Zillah High School, Madurai.) சேர்ந்தார். தமிழில் தன் மகனுக்கிருந்த ஆர்வத்தைக் கண்ட கோவிந்த சாஸ்திரியார், மதுரைக் கலாசாலையில் ஆசிரியராயிருந்த மகாவித்துவான் சு. சபாபதி முதலியாரிடம் சூரியநாராயணனைத் தமிழ் பயில 1885-இல் சேர்த்தார்[2] தொல்காப்பியம் முதலிய பல நூல்களை ஏறத்தாழ நான்காண்டுகள் இவரிடம் சூரியநாராயணன் பயின்றார். தமிழ்ச் செய்யுட்களை விரைந்து பாடும் தன்மையும் பெற்றார்.

அந்நாளில் மதுரை ஜில்லா உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராயிருந்த ஜான் பாலகிருஷ்ணநாயுடு, சூரியநாராயணன் எழுதிய ஒரு கட்டுரையைப் பாராட்டி "பகலவா'' நீ எழுதும் எழுத்தெல்லாம் இருளாயிருக்கிறதே!''[3] என்றாராம்.

மதுரையில் கல்வி பயின்ற நாட்களிலேயே சிலம்பம், மல்யுத்தம் போன்றவற்றையும் சூரியநாராயணன் கற்றார். 1890-ஆம்

ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தின் எப். ஏ., தேர்வில் முதல் வராகத் தேர்ச்சி பெற்று, பாஸ்கர சேதுபதி அரசர் உதவிச் சம்பள மும் பெற்று, சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் பி. ஏ. வகுப்பில் சேர்ந்தார். இவருடைய அறிவுக் கூர்மையையும், தமிழ் ஆர்வத்-தையும் விளக்கும் இரு நிகழ்ச்சிகள் வருமாறு :

அப்பொழுது, கிறித்துவக் கல்லூரியில் முதல்வராக விளங்கிய வர் டாக்டர் வில்லியம் மில்லர், பி.ஏ. வகுப்பில் வருகைப்பதிவு எடுத்துக் கொண்டு வந்த மில்லர், "சூரியநாராயணன்' என்ற பெயரைப் படிக்க இடரப்பட்டு, 'உமது பெயரைச் சற்று மாற்றிக் கொள்ள முடியுமா?' என்று கேட்டார். சூரியநாராயணனும் 'அவ்-வாறே செய்கிறேன்' என்று கூறினார். மறுநாள் வருகைப்பதிவு எடுத்த மில்லருக்கு, இவர் பெயரைப் படிப்பது மேலும் இடர்ப்-பாடாயிருந்தது. 'சூரியநாராயணன்' என்ற பெயர் 'சூரியநாராயண சாஸ்திரி' என்று மாற்றப்பட்டிருந்தது. காரணம் வினவிய மில்லரி டம் சாஸ்திரியார், 'தாங்கள் கூறியபடி என் பெயரை மாற்றிக் கொண்டேன். நீங்கள் குறுக்கிக் கொள்ளச் சொல்லவில்லயே' என் றாராம். சாஸ்திரியாரின் அறிவுக்கூர்மையைக் கண்ட மில்லர் இவரிடம் பேரன்பு காட்டத் தொடங்கினார்.

பிறிதொரு நாள் டென்னிசன் (Tennyson) இயற்றிய 'ஆர் தரின் இறுதி' (Morte D' Arthur) என்ற பாடலின் ஒரு பகுதியை மில்லர் நடத்தி வந்தார். அப்பகுதி வருமாறு : இறக்குந் தருவாயில் உள்ள ஆர்தர் அரசனை அவன் மனைவியருடன் படகொன்றில் வைத்து நதியில் விடுகின்றனர். துடுப்புக்களை அசைத்துச் செல் லும் அப்படகை ஓர் அழகிய அன்னப்பறவைக்கு உவமையாகப் புலவன் கூறுகிறான். இப்பகுதியை நடத்திவந்த மில்லர், சாஸ்திரி யாரைப் பார்த்து, 'தமிழின் பெருமையை எப்பொழுதும் பேசு-கிறாயே! இதுபோன்ற உவமை தமிழ் இலக்கியத்தில் வந்துள்ளதா? சொல் பார்ப்போம்!' என்றார். உடனே சாஸ்திரியார், 'டென்னிச னுக்கு எட்டு அல்லது ஒன்பது நூற்றாண்டுக்கு முன்பு எழுதப்-பட்டுள்ள கம்பராமாயணத்தில் படகின் செலவிற்கு மடஅன்னத் தின் அசைவைக் கம்பர் உவமையாக்குவார். இதே உவமையைத் தான் டென்னிசனும் பிற்காலத்தில் ஆண்டுள்ளார்.

"விடுநதி கடிதென்றான் மெய்யுயி ரனையானு
முடுகின நெடுநாவாய் முரிதிரை நெடுநீர்வாய்க்
கடிதினின் மடவன்னக் கதியது செலநின்றா
ரிடருற மறையோரு மெரியுறு மெழுகானார்.

என்பதே அப்பாடல் எனறார்.[6]

1892 ஆம் ஆண்டு நிகழ்ந்த பி.ஏ. தேர்வில் தமிழிலும், வேதாந்த தத்துவ சாஸ்திரத்திலும் பல்கலைக்கழக அளவில் முதல் வராகத் தேறினார். 1893 ஆம் ஆண்டு பட்டம் பெற்றார். பல்கலைக் கழக அளவில், தமிழில் முதல்வராக வருபவர்க்கு வழங்கப்படும் பாஸ்கரசேதுபதி அரசர் பெயரால் நிறுவப்பட்ட, பொற்பதக்கத்தையும் பரிசாகப் பெற்றார்.

பல்கலைக்கழக அளவில் முதல்வராகத் தமிழில் தேர்ச்சி பெறுபவரைத் தம் இல்லத்திற்கு சி. வை.தாமோதரம் பிள்ளை தாமும் அவர்களுக்கு ஒரு தேர்வு நிகழ்த்தி அவர்களின் தமிழறிவின் தகுதியைச் சோதித்துப் பரிசுகள் வழங்குவார். அவ்வாறே, தாமோதரம் பிள்ளை, சாஸ்திரியாரைத் தம் இல்லத்திற்கு அழைத்து, வினாத்தாள் ஒன்றும் கொடுத்தார். ஒரு மணி நேரத்தில் பதில் அளிக்க வேண்டிய அந்த வினாத்தாளை அரைமணி நேரத்தில் சாஸ்திரியார் முடித்துக் கொடுத்தார். தம்மை வந்து மறுநாள் காணுமாறு சாஸ்திரியாருக்கு விடை கொடுத்தனுப்பினார் தாமோதரம் பிள்ளை.

'மறுநாள் சாஸ்திரியாரைக் கண்ட தாமோதரம் பிள்ளை, உமது விடைகள் உயரிய செந்தமிழ் புதுக்கருத்துக்களைக் கொண்டு விளங்குகின்றன. உம்மைத் திராவிட சாஸ்திரி என்று அழைத்தலே சாலப்பொருந்தும்' என்று கூறினார். மேலும், சாஸ்திரியாரின் மொழிபெயர்ப்புத் திறனை அறியவிரும்பி, ஆங்கிலக் கவிதைப் பகுதியைத் தமிழில் செய்யுள் வடிவாக மொழி பெயர்க்கு மாறு பணித்தார்.

ஷேக்ஸ்பியர் இயற்றிய 'வெனிஸ் வர்த்தகன்' (Merchant of Venice) என்ற நாடகத்தில் இசை பற்றிக் கூறியுள்ள,

'The Man that hath no music in himself
Nor is not mov'd with concord of sweet sounds

Is fit for treasons, strategems and spoils;
The motions of his spirit are dull as night,
And his affections dark as Erebus;
Let no such man be trusted'[5]

என்ற பகுதியைத் தாமோதரம் பிள்ளை எடுத்துக் கொடுத்தார். சாஸ்திரியார் உடனே,

'இன்னலங் கனிந்த பாடற் காயக னல்ல னேனு
மின்னிசை கேட்டு நெஞ்ச மிளகிடா திருப்பான் வஞ்ச
மன்னவர் துரோக மாதி மாபாவஞ் செய்யத் தக்கா
னன்னவன் றனைநம் பாம லகற்றிட வேண்டு மன்றே'[6]

என்று மொழிபெயர்த்துக் கொடுத்தார். தாமோதரம் பிள்ளை மிக மகிழ்ந்து., தாம் பதிப்பித்துள்ள இலக்கண இலக்கிய நூல்களைத் தம் கையெழுத்திட்டு அன்பளிப்பாக வழங்கினார்.

## 1. 2. ஆசிரியப்பணி

1893ஆம் ஆண்டு, பட்டமளிப்பு விழாவை ஒட்டி, மில்லர் தத்துவ சாத்திர ஆசிரியர் பணியை, சாஸ்திரியாருக்கு அளித்தார். ஆனால், சாஸ்திரியாரோ, தமிழ் மீதுள்ள பற்றுதலினால், ஊதியம் குறைந்திருந்தாலும் தமக்குத் தமிழாசிரியப் பணியையே அளிக்குமாறு வேண்டினார். இவரது தமிழார்வத்தைக் கண்டு வியந்த மில்லர், இவருக்குத் தமிழாசிரியர் பதவியை அளித்து, தத்தவ சாத்திர ஆசிரியருக்குரிய ஊதியத்தை வழங்கினார். சூரிய நாராயண சாஸ்திரியார் 1893 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள், தமது இருபத்து மூன்றாம் அகவையில் கிறித்தவக் கல்லூரியில் உதவித் தமிழாசிரியர் பணியை மேற்கொண்டார். 1895 ஆம் ஆண்டில் கிறித்தவக் கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராகப் பதவி உயர்வு பெற்றார்.

சாஸ்திரியார் பாடம் நடத்தும்பொழுது வகுப்பில் மாணவர் கூட்டம் அதிகமாக இருக்கும்.பிற வகுப்பு மாணவர்கள் கூட தங்கள் வகுப்புக்களைப் புறக்கணித்துவிட்டு சாஸ்திரியாரின் வகுப்பில் கூடி விடுவார்கள். சாஸ்திரியார் தம் வகுப்புக்களில் கையாளும் நடையே

பண்டைய உரையாசிரியர்களின் வசனநடைதான். அந்நடை அவருக்கு இயல்பாக அமைந்திருந்தது.

"ஒருமுறை ஜீவகசிந்தாமணி கோவிந்தையாரிலம்பகம் பாடஞ் சொல்லிய சமயத்து,

'நாம வென்றிவேள் நகைகொள் மார்பனைக்
காம னே எனக் கன்னி மங்கையர்
தாம ரைக்கணாற் பருக'

என்னும் பாடலின் பொருள்கூறும் அமையத்து — 'தாமரைக்கணால் பருக' தாமரை போலும் கண்ணால் பருக எனவும், மங்கையராதலால் வெளிப்படையாகப் பார்க்க அஞ்சி, தாம்+அரைக்கணால் பருக——அ∴தாவது ஜாடையாக அரைக்கண்ணால் பார்கக எனவும், தாம்+மரைக்கணால் (மான் போலும் கண்ணால்) பருக என மூன்றாவது ஒரு பொருளும் கொடுத்தனர்"[7] என்பார் சாஸ்திரியின் மாணவரான வ.சு. செங்கல்வராய பிள்ளை.

சாஸ்திரியார் வகுப்பில் ஒரு மாணவர். 'எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்பனவற்றைப்பற்றி விளங்குமாறு எடுத்துக் கூறினீர்கள். அடுகளையும் தொடைகளையும் பற்றி விவரித்தவரின் மேல் விவரிப்பதற்கு யாது உளது?' என்று குறும்பாக வினவினார். உடன் சாஸ்திரியார், 'தொடையிலக்கணத்திற்குப் பிறகு எவ்விலக்கணம் கூறப்படும் என்று ஐயுற்ற நுமக்கு மற்றொரு நாள் விளக்குமாற்றால்[8] விளக்குதும்' என்று விடையளித்தார்.

ஒரு முறை சாஸ்திரியாரின் சொற்பொழிவைக் கவனிக்காது இருந்த ஒரு மாணவரை, 'நமது சொற்பொழிவைப் பொருட்படுத்த விரும்பாத நீ இவணிருந்து எழுவாய் ; நீ ஈண்டு இருத்தலால் உனக்கோ பிறர்க்கோ பயனிலை; இவணிருந்து உன்னாற் செயப்படு பொருளிலை ; ஆதலான் வகுப்பினின்றும் வெளியேறுக' என்று நயம்படக் கூறினார்.

வ.சு. செங்கல்வராய பிள்ளை,கிறித்தவக் கல்லூரியில் பயின்றவர்களில் தமிழில் முதல்வராகத் தேறினார். அக்கல்லூரியைச்

சார்ந்த ஆர். வி. கிருஷ்ணய்யர் ஆங்கிலத்தில் முதல்வராகவும், தமிழில் இரண்டாமவராகவும் தேறினர். கல்லூரி அதிகாரிகள் தமிழுக்குக் கொடுக்க வேண்டிய பரிசை ஆர். வி கிருஷ்ணய்யருக் குக் கொடுப்பதென முடிவு செய்தனர். சாஸ்திரியார், மில்லரிடம் வாதாடி' தமிழ்ப் பரிசைத் தமிழில் முதல்வராகத் தேறிய செங்கல் வராய பிள்ளைக்கே கொடுக்குமாறு செய்தார். இந்நிகழ்ச்சியால் சாஸ்திரியாரின் தமிழார்வமும், நேர்மைக்காகப் போராடும் நெஞ்சுறுதியும் வெளிப்படுகின்றன.

சாஸ்திரியாரைப் பற்றி, அவருடைய மாணவராகிய வ. சு. செங்கல்வராய பிள்ளை". ........ அதிநிபுணர். மாணவர்களுடைய கண்ணையும் கருத்தையும் தமது கலைப்புலமையால் ஒருங்கே கவரும் ஆற்றல் வாய்ந்தவர். அருமையான பல செய்திகளை வகுப்பில் சரமாரியாகப் பொழிந்த கொண்டல். இவர் வகுப்பில் தமிழ்க்கூறு ஒருமணி ஒருநிமிடமாக ஓடிவிடும்."[9] என்று கூறுகிறார்.

ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக இருந்த டாக்டர். ஜி. யூ. போப். வேலையிலிருந்து விலகி ஒய்வு பெற்றார். தமக்குப்பின் அப்பதவியை வகிக்கத் தகுதியானவர் சாஸ்திரியாரே என்பதை உணர்ந்த போப், சென்னைக் கவர்னரான ஆம்ப்ட்ஹில் வழியே சாஸ்திரியாரின் கருத்தறிய விழைந்தார். சாஸ்திரியார் தமது உடல் நலம் குன்றியுள்ள காரணத்தால் வெளிநாடு செல்ல மறுத்து விட்டார்.''[10]

## 1. 3 இல்வாழ்க்கை

சாஸ்திரியாரின் பத்தொன்பதாம் அகவையில் அவருக்குப் பழனியில் திருமணம் நடந்தது. அவரது மனைவியார் பெயர் முத்துலட்சுமி அம்மாள். சாஸ்திரியாருக்கு ஒரு பெண் குழந்தை யும், இரண்டு ஆண்மக்களும் பிறந்தனர்.

## 1. 4 சாஸ்தியாரின் தமிழ்ப்பணி

சாஸ்திரியார் பற்பல துறைகளிலும் ஈடுபட்டு ஆக்கப்பணி கள் பல புரிந்துள்ளார்.

### 1. 4. 1 நாடகப்பணி

நாடகத்தமிழில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்த சாஸ்திரி-யார், 'ரூபாவதி அல்லது காணாமற்போன மகள்' என்ற உரை-

நடை நாடகத்தை 1895 ஆம் ஆண்டு இயற்றினார். இந்நாடகம் 1895 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் பதினைந்தாம் நாள் வியாழக்கிழமை சென்னை வித்தியாபிமான சங்கத்தாரால் அரங்கேற்றப்பட்டது. சாஸ்திரியாரே 'ரூபாவதி' வேடம் ஏற்று நடித்தார். "இவர் நாடகம் எழுதுவதில் வல்லுநராயிருப்பதனோடு எத்தகைய நாடக பாத்திரத்தையும் எளிதிற்றாமெனக் கருதி நடிக்கும் வன்மையுமுடையார்."[11] என்பார் ந. பலராம ஐயர்

தமிழில் நாடகங்கள் பெருக வேண்டுமென்ற எண்ணத்துடன் 'நாடகவியல்' என்ற நாடக இலக்கண நூலை 1897 ஆம் ஆண்டு நூற்றுப்பன்னிரண்டு நூற்பாக்களாக வெளியிட்டார். இதே ஆண்டு நாடகவியலுக்கு இலக்கியமாக, 'கலாவதி' என்னும் நாடகத்தை இயற்றினார். இந்நாடகம் 1897 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல்நாள் சென்னை வித்வ மநோரஞ்சநீ சபையோராற் சென்னை விசயை பொதுசன மண்டபத்தில் அரங்கேற்றப்பட்டது. இந்நாடகத்திலும் 'கலாவதி' வேடம் ஏற்று சாஸ்திரியார் நடித்தார். கலாவதி நாடகத்தை, சேது சமஸ்தான அதிபரான பாஸ்கர சேதுபதிக்கு உரிமையாக்கினார். பாஸ்கர சேதுபதி முன்னிலையில் நாடகம் அரங்கேறியது. பாஸ்கர சேதுபதியின் வேண்டுகோளுக்கு இணங்கி, நிரோட்டகச் செய்யுள் ஒன்றையும் கலாவதி நாடகத்தில் சேர்த்தார். [12]

1897 ஆம் ஆண்டு 112 நூற்பாக்களுடன் வெளியிட்ட நாடக வியலை விரிவுபடுத்தி 272 நூற்பாக்களுடன் 1901 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் இரண்டாம் பதிப்பாகச் சாஸ்திரியார் வெளி-யிட்டார். இப்பதிப்பைத் தமது ஆசிரியராகிய சபாபதி முதலியார்க்கு உரிமையாக்கினார்.

'மானவிஜயம்' என்னும் நாடகத்தை, கிறித்துவக்கல்லூரி இதழில் சாஸ்திரியார் 1902 ஆண்டு பிப்ரவரித் திங்கள் தொடங்கி, ஜூன் மாதம் முடிய எழுதினார். இஃது 'அங்கம்' எனும் நாடக வகையைச் சார்ந்தது. அந்நாடகம் நூல் வடிவாக 1902 ஆம் ஆண்டிலேயே வெளியிடப்பட்டது. தமிழில், கவிதையால் இயன்ற முதல் அவல நாடகம் இதுவே.

### 1. 4. 2 கவிதைப்பணி

சாஸ்திரியார் தமது பத்தொன்பதாம் அகவையில் 'மாலா பஞ்சகம்' எனும் சிறு தோத்திர நூலை இயற்றினார். 1894 ஆம்

ஆண்டு, தம் தந்தையாரின் ஞானாசிரியன்மீது 'மணியசிவனார் கலிவெண்பா' இயற்றினார். அதே ஆண்டு, மணியசிவனாரின் மாணவர்களில் சிறந்தவர்களின் பக்திச் செயல்களைப் புகழ்ந்து 'அவயவ அறிக்கை' என்னும் பாடலை இயற்றினார்.

1899 ஆம் ஆண்டு டிசம்பர்த்திங்கள் ஆறாம்நாள், அவ்வப் பொழுது எழுதிய 'சானெட்' (Sonnet) வகையைச் சார்ந்த தனிப்பா சுரங்களைத் தொகுத்து, தனிப்பாசுரத் தொகையென வெளி-யிட்டார். பரிதிமாற்கலைஞன் எனும் புனைபெயரில் இந்நூலை வெளியிடுவதற்குரிய காரணத்தை முகவுரையில் சாஸ்திரியார் குறிப்பிட்டுள்ளார். இந்நூலின் இரண்டாம்பதிப்பு 1901 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் முதல்நாள் ஜி. யூ. போப் அவர்களின் ஆங்கில மொழிபெயர்ப்புடன், 'திருவள்ளுவர்' என்னும் தனிப்பாசுரமும் சேர்த்து வெளியிடப்பட்டது.

பற்பல சமயங்களில் பற்பல பொருள் பற்றித் தாம் பாடிய செய்யுட்களையெல்லாம் தொகுத்துப் 'பாவலர் விருந்து - முதல் நாள்' என்ற பெயரில் நூல் வடிவாக 1901 ஆம் ஆண்டு வெளி-யிட்டார். சாஸ்திரியாரின் 'சித்திரகவி விளக்கம்', சாஸ்திரியார் இறந்தபின் தொகுத்து வெளியிடப்பட்டது.

### 1.8.4.3 உரைநடைப்பணி

சாஸ்திரியார் கிறித்தவக் கல்லூரியில் மாணவராக இருக்-கும் பொழுதே பல கட்டுரைகளை எழுதியுள்ளார். அவை 'விவேக சிந்தாமணி' பத்திரிகையில் வெளியாயின.

1899-ஆம் ஆண்டு சாஸ்திரியார், கா.ஸ்ரீ. கோபாலாசாரியார், தி.கோ. ஸ்ரீரங்காசாரியார். ஆ சேதுராம பாரதியார் ஆகிய மூவரு-டன் சேர்ந்து சென்னைச் செந்தமிழுரைச் சங்கம் என்ற சங்கத்தை நிறுவினார். இச்சங்கத்தின் வழி, 1899-ஆம் ஆண்டு மெற்றிக்-குலேஷன் பாடங்கட்கும், 1900-ஆம் ஆண்டின் எப்.ஏ. பாடங்கட்கும், 1901-ஆம் ஆண்டின் பி.ஏ. பாடங்கட்கும் உரை எழுதினார்.

நீதிநெறி விளக்கத்தின் முதல் ஐம்பத்தொரு பாடல்-களுக்கு உரை வகுத்துள்ளார் சாஸ்திரியார்.

1903-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் சாஸ்திரியார், 'தமிழ் மொழியின் வரலாறு' என்னும் மொழிநூலை வெளியிட்டார். இந்நூலை, வில்லியம் மில்லர் அவர்கட்கு உரிமையாக்கினார். தமிழில், தமிழ் மொழி பற்றிய ஆராய்ச்சி உணர்வோடு எழுதப்பட்ட முதல்நூல் இதுதான்.

சாஸ்திரியார் இறந்தபிறகு, பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியரான தி. செல்வக்கேசவராய முதலியார், சாஸ்திரியார் தொகுத்துத் தயார் செய்து வைத்திருந்த 'எட்டாம் வாசக புத்தகம்', 'ஒன்பதாம் வாசக புத்தகம்' என்பவற்றை நிறைவு செய்து வெளியிட்டார். அவற்றுள் சில பாடங்களைப் பள்ளி மாணவர்களுக்காக, சாஸ்திரியார் எழுதியுள்ளதாக தி. செல்வக்கேசவராய முதலியார் குறிப்பிட்டுள்ளார்.

'தமிழ்ப்புலவர் சரித்திரம்', 'தமிழ் வியாசங்கள்' ஆகியன சாஸ்திரியார் இறந்த பிறகு நூல் வடிவில் தொகுத்துப் பதிப்பிக்கப்பட்டன. மாதவையாவின் 'பத்மாவதி சரித்திரம்' பற்றி, கிறித்தவக் கல்லூரி இதழில் சாஸ்திரியார் ஆங்கிலத்தில் கட்டுரை எழுதியுள்ளார்.

### 1.4.4. சாஸ்திரியார் படைத்த புதினம்

முழுவதும் உயரிய செந்தமிழ் நடையான் இயன்ற நூல் ஒன்று படைக்குமாறு சி.வை. தாமோதரம் பிள்ளை, சாஸ்திரியாரை வேண்டினார். அதற்கிணங்கிய சாஸ்திரியார் 1898-ஆம் ஆண்டு முதல் 'ஞானபோதினி' பத்திரிகையில் 'மதிவாணன்' எனும் புதினத்தைத் தொடர்ந்து எழுதலானார். 'மதிவாணன்' நூல் வடிவில் 1902-ஆம் ஆண்டு மே மாதம் வெளிவந்தது. 'ஆயின், 'மதிவாணன்' முற்றுப்பெற்று நூல்வடிவில் வெளிவரும் முன்பே தாமோதரம் பிள்ளை இறந்தமை, சாஸ்திரியாருக்கு மிகவும் துக்கத்தை அளித்த நிகழ்ச்சியாகும்.

### 1.4.5 சிறப்புரை, பாயிரம் வழங்கியமை

சாஸ்திரியார், சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ், திருக்குளந்தை வடிவேலன் பிள்ளைத்தமிழ், மதுரைமாலை, மறைசையந்தாதி, சங்கீத சந்திரிகை, சரசாங்கி நாடகம், குணசீலன்,

வர்ணவைத்ய சாஸ்திரம், மகாபாரதம், லீலாவதி—சுலோசனை அல்லது இருசகோதரிகள், பஞ்ச தந்திரம் முதலிய நூல்களுக்குச் சிறப்புரைகளும் சிறப்புப் பாயிரங்களும் வழங்கியுள்ளார்.

### 1.4.6 இதழாசிரியர் பணி

எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளை ஆசிரியராக இருந்து நடத்திவந்த 'ஞானபோதினி' இதழுக்குச் சாஸ்திரியார் கூட்டாசிரியர் பதவியை 1900-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் மேற்கொண்டார். அன்றிலிருந்து 'ஞானபோதினி' அலுவலகம் சாஸ்திரியாரின் இல்லமாகிய லிங்கிச் செட்டித்தெரு 286-ஆம் எண்ணிற்கு மாறியது. இதழாசிரியர் பணியைச் சாஸ்திரியார் திறம்பட நடத்தினார். சாஸ்திரியார் இறந்தபின், பூரணலிங்கம் பிள்ளை, 1904-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள், 'ஞானபோதினி' இதழில், 'தமிழருக்கு அறிக்கை' என்ற தலைப்பில்,

> "...... பேதைப் பருவத்தில் அன்னையை இழந்தபடியால், உலக வசனத்துக் கொப்ப இப்பத்திரிகை விஷயத்தில் பெற்றப்பன் சிற்றப்பனாகா னென்ற வுறுதியைத் தமிழுலகிற்குத் தெரிவிக்கின்றேன்"[13]

என்று எழுதினார். இதிலிருந்து சாஸ்திரியார் மிகச் சிறந்த முறையில் இதழ் ஆசிரியப் பணி புரிந்தார் என்று தெரிகிறது.

### 1.4.7 இயற்றமிழ் மாணவர்

கல்லூரியில் மாணாக்களுக்குப் பாடம் சொல்லுவதுடன் அமையாது, தம் இல்லத்தில் தமிழிடம் ஈடுபாடு கொண்டுள்ள மாணவர்களைச் சேர்த்து, அவர்களுக்குச் செந்தமிழ் நூல்களை முறைப்படிக் கற்பித்தார். அங்ஙனம் கலை பயிலும் மாணவர்களுக்கு இயற்றமிழ் மாணவர் எனப்பெயர் கொடுத்து, ஆண்டுக்கு ஒரு முறை, கற்பித்த நூல்களில் தேர்வும் வைத்தார்.[14]

இயற்றமிழ் மாணவருள் ஒருவரான சரவணமுதலியார், கல்வி கற்கத் தொடங்கி ஒருமாதம் சென்றபின், 'அம்மாதச் சம்பளமாக சாஸ்திரியாருக்குப் பொருள் கொடுக்க முயன்றார். சாஸ்திரியார் சினத்துடன், 'யாம் தமிழ் மொழியை எவர்க்கும் விற்பதில்லை' என்றார். சரவண முதலியாரும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

சாஸ்திரியாரின் இயற்றமிழ் மாணவர் பன்னிருவர். இதை வ. சு. செங்கல்வராய பிள்ளை,

"மாணார் குடமுனிபோன் மாபா டியமுனிபோன்
மாணாக்கர் பன்னிருவர் வள்ளானீ கொண்டனையே"[15]

என்று குறிப்பிடுவார். இவ்வாறு பாடம் கேட்ட இயற்றமிழ் மாணவர்கள், ந. பலராம ஐயர், பிரணதார்த்திகரசிவனார், சலசலோசனச் செட்டியார், சருக்கை ராமசாமி ஐயங்கார், சித்தூர் சுப்பிரமணியாசாரியார், செய்யூர் முத்தையா முதலியார், கு. ரா. ஸ்ரீநிவாச ஐயங்கார், சருக்கை சுந்தராச்சாரியார், சருக்கை வரதாச்சாரியார். ஜக்கராஜு பி. வாசுதேவ பந்துலுகாரு, வ. சு. சண்முகம் பிள்ளை, சி. ந. சரவண முதலியார் ஆகிய பன்னிருவர் ஆவர்.

"தமிழ் மாணவர் பலர் அவரை எப்பொழுதும் அவர் வீட்டில் சூழ்ந்திருப்பார்கள். தமிழ்த் தெய்வம் கொலு வீற்றிருந்ததென்றே கூறலாம். ஒருவருக்கு ஒரு நூலுக்குப் பொருள் சொல்லுவார். ஒருவருக்கு இன்னநூல் நீங்கள் தமிழில் எழுத வேண்டும் எனக்கூறி அதற்கு வேண்டிய குறிப்புக்களைத் தருவார் ஒருவருக்குத் தாம் இயற்றும் நூலுக்குரிய செய்தியைத் தாம் சொல்லி எழுத வைப்பார். ... .. இங்ஙனம் அவர் இல்லம் கலைமகள் கூத்தாடும் நிலையமாகக் கவின் பெற்றிலங்கியது"[16] என்று வ. சு. செங்கல்வராய பிள்ளை கூறுவார்.

### 1. 4. 8. *பதிப்புப் பணி*

1896 ஆம் ஆண்டு சபாபதி முதலியார் இயற்றிய 'திருக்குளந்தை வடிவேலன் பிள்ளைத்தமிழ்' என்ற நூலைப் பதிப்பித்தார்.

1898-ஆம் ஆண்டு 'கலிங்கத்துப்பரணி'யையும், 1899-ஆம் ஆண்டு 'நளவெண்பா'வையும் பதிப்பித்தார். 1901-ஆம் ஆண்டு சபாபதி முதலியாரின் 'மதுரை மாலை'யைப் பதிப்பித்தார்.

தாமும் தம் இயற்றமிழ் மாணவர்களும் இயற்றிய நூல்களையும் சாஸ்திரியார் பதிப்பித்தார். 'நாமகள் சிலம்பு' என்ற பெயரில் நாடகங்களையும், 'தமிழ்மகள் மேகலை' என்ற பெயரில் செய்யுள் நூல்களையும், 'இன்பவல்லி' என்ற பெயரில் உரைநடை நூல்-

களையும், 'ஞானதரங்கிணி' என்ற பெயரில் தத்துவ நூல்களையும் 'கலைமகள் கலாபம்' என்ற பெயரில் பண்டைத் தமிழ் நூல்களின் புதிய பதிப்புக்களையும், 'கலாநிதி' என்ற பெயரில் பிறவகை நூல்களையுமாகப் பற்பல நூல்களைச் சாஸ்திரியார் பதிப்பித்தார்.

திருவுத்தரகோச மங்கை-மங்களேசுவரி பிள்ளைத் தமிழையும், மழவை மகாலிங்க ஐயரின் இலக்கணச் சுருக்கத்தையும் பதிப்பித்தார்.

மாலா பஞ்சகம், குணவதி, சீதா பகரணம், பார்வதி பரிணயம், உமை திருமணம், அவ்வைக்காட்சி, சூர்ப்பணகை, முத்திரா ராட்சசம், இன்னுமா, இழிசினர் வழக்குரை வரையறை, வித்தியா விருத்தி ஆகியன சாஸ்திரியார் இயற்றியும் இயற்றக் கருதியும் இருந்த நூல்கள். இவற்றுள் முத்திரா ராட்சசத்தில் முதல் அங்கத்தின் இரண்டு களங்கள் கிடைத்துள்ளன.

### 1. 4. 9. *பிற பணிகள்*

1902ஆம் ஆண்டு, கல்லூரிப் பாடத்திட்டத்திலிருந்து தமிழை விலக்கி, அதற்குப் பதிலாக வடமொழியைப் பாடத்திட்டத்தில் சேர்ப்பதற்குப் பல்கலைக் கழகத்தினர் முடிவு செய்தனர். இதனை வன்மையாகக் கண்டித்து, சாஸ்திரியார் 'சர்வகலாசாலை விசாரணை' என்ற தலைப்பில் ஞானபோதினி இதழில் 1902 ஆம் ஆண்டு செப்டம்பர், அக்டோபர், நவம்பர்த் திங்கள்களில் எழுதினார். அவ்வாண்டு அக்டோபர் மாதம் 16ஆம் நாள் தஞ்சைத் தமிழ்ச் சங்கம் இதனை விவாதிக்கக் கூடியபோது சாஸ்திரியார் அக்கட்டத்திற்குத் தலைவராய் வீற்றிருந்து, இச்செயலைக் கண்டித்து, காரணங்களை எடுத்துக்கூறித் தீர்மானம் இயற்றினார்.[17] பல்கலைக்கழகத்தினர் சென்னை ஆசிரியர் சங்கத்தில் இதனைத் தீர்மானமாகக் கொண்டு வர முயன்றனர்.

இதை உணர்ந்த சாஸ்தியார், பூரணலிங்கம் பிள்ளையுடன் வாடகை வண்டி ஏற்பாடு செய்துகொண்டு, ஆசிரியர் சங்கத்தின் ஒவ்வோர் உறுப்பினரையும் அவர்களது இல்லத்தில் கண்டு உண்மை நிலையை விளக்கினர் சங்கக்கூட்டத்தில் தாய்மொழி வென்றது.[18] அன்று சாஸ்திரியார் முயற்சி எடுத்திராவிட்டால் தமிழ்மொழி கல்லூரிப் பாடத்திட்டத்திலிருந்து நீக்கப்பட்டிருக்கும்.

1901-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 15-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமையன்று மதுரையில், 'மதுரைத் தமிழ்ச்சங்கம் கூடியது. இராமநாதபுரம் பாஸ்கர சேதுபதி சபாநாயகராக வீற்றிருக்க, பாண்டித்துரைத் தேவர் தலைவராக விளங்கினார். அன்று சாஸ்திரியார், உ. வே. சாமிநாதையர் ஆகிய பல புலவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.[10] மதுரைத் தமிழ்ச்சங்கத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த சாஸ்திரியார், தாம் எழுதும் கட்டுரைகளில் தமிழ்ச்சங்கம் இன்னின்ன துறைகளில் ஈடுபட வேண்டுமெனக் குறிப்பிட்டு வந்தார். 1902-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 'செந்தமிழ்' இதழ் தொடங்கப் பெற்ற பொழுது, தமிழின் சிறப்புப் பற்றி, 'உயர்தனிச் செம்மொழி' என்ற கட்டுரையை அவ்விதழில் சாஸ்திரியார் எழுதினார்.

கிறித்துவக் கல்லூரி இதழில் ஆங்கில மொழியால் அமைந்த படைப்புக்களே வெளியிடப்பட்டு வந்தன. பிறமொழிகள் இடம் பெறவில்லை; சாஸ்திரியாரின் முயற்சியால் அக்கொள்கை மாறியது. முதன்முதலாகச் சாஸ்திரியாரின் 'திருவள்ளுவர், போர், எறும்பு' ஆகிய தனிப்பாசுரங்களை 1901-ஆம் ஆண்டு ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் கிறித்துவக் கல்லூரி இதழ் வெளியிட்டது.

## 1.5 இறுதிக்காலம்

1903-ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து சாஸ்திரியார் உடல்நலம் குன்றியதால் ஆறு மாதத்திற்கு விடுமுறை எடுத்துக் கொண்டார். அப்பொழுதும் இல்லத்தில் இருமிக் கொண்டு, 'ஐயா; இருமல் எம்முடன் பெருகல் செய்கிறதே' என்று கூறியவாறு பாடம் நடத்துவார்.

இறுதிநாளில் மில்லர் இவர் இல்லத்திற்கு வந்து, சாஸ்திரியாரின் கரங்களைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டார். "எனது புருவத்து ரோமங்கள் என் கண்களை மறைக்கின்றன; அவ்வாறு வயது முதிர்ந்தும் யான் இன்னும் உயிரோடிருக்கிறேன்; உலக இன்பங்களை அனுபவியாத குறுகிய காலத்தே தமிழ்ப்பணி பல செய்த நீர் பலநாள் உலகில் வாழ வேண்டியிருக்க, எமன் உம்மைக் கொண்டு போவது எத்துணை கொடுமை"[20] என்று மில்லர் வருந்தி அழுதார். ஜேம்ஸ் ரஸ்ஸல் துரையவர்கள் "சூரியநாராயணா! மனிதனை விடச் சிறந்தவர் (கடவுள்) கைகளில் உன்னை ஒப்புவிக்கிறேன்"[21] என்று வருந்திக் கூறினார்.

சூரியநாராயண சாஸ்திரியார் 1903-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் இரண்டாம் நாள் திங்கட்கிழமை, தாம் குடியிருந்த லிங்கிச் செட்டித் தெரு இல்லத்தினின்று, தமது முப்பத்து மூன்றாம் அகவையில் இறைவன் திருவடி சேர்ந்தார். மாணவர்களும் ஆசிரியர்களும் ஆயிரக்கணக்காய், சென்னை லிங்கிச் செட்டித் தெருவில் கூடித் துக்கம் மேற்கொண்டனர்.

சாஸ்திரியாரின் மறைவுக்கு வருந்தி, பற்பல இதழ்கள் சாஸ்திரியாரின் தமிழ்ப்பற்றையும், அவர் தமிழுக்காக உயிர் நீத்தமையையும் சிறப்பித்து எழுதின. ஆங்கில நாளேடாகிய 'இந்து' இதழ் சாஸ்திரியாரின் மறைவுக்கு வருந்தி, "தமிழ் மீது இவர் (சாஸ்திரியார்) கொண்ட தணியாக் காதலினால் அதிகமாக உழைத்ததும், தமிழ் இலக்கியப் படைப்புக்களில் இவர் காட்டிய அதிக ஆர்வமுமே இவர் இளம் வயதாகிய முப்பத்து மூன்று வயதில் இறந்தமைக்குக் காரணமாகும். கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராக விளங்கிய ஒரு சில ஆண்டுகளிலேயே, இவர் மாணவர்களிடம் மொழிப்பற்றை உருவாக்கி, அவர்கள் புதுவகையான நூல்கள் படைப்பதற்குக் காரணமாக விளங்கினார். இவருடைய எழுத்துக்கள் தமிழுலகைச் சார்ந்த அனைவராலும் ஒரே மனதாகப் போற்றப்பட்டன.[22] என்று எழுதியது.

'விவேக சிந்தாமணி', 'இந்து நேசன்', 'விவேகபாநு', 'ஞானபோதினி' ஆகிய இதழ்கள் சாஸ்திரியார் மறைவு குறித்து வருந்தி எழுதின.

கிறித்தவக் கல்லூரி மாத இதழ் சாஸ்திரியாரின் மறைவுக்கு வருந்தி ஒரு குறிப்பு வெளியிட்டது. "……… தமிழாசிரியர் பதவியை இக்கல்லூரியில் அநேகமாகக் கல்லூரி அளவில் மேற்கொண்ட முதல் பட்டதாரி இவரே. …… தாம் கற்றுக் கொடுக்கக் கூடிய துறையில் மாணவர்க்கு ஆர்வத்தை ஏற்படுத்துவதே ஓர் ஆசிரியனுடைய வெற்றிக்கு அளவுகோல் என்றால், கடந்த பத்தாண்டுகளில் மாநிலத்தில் இவரைவிடச் சிறந்த ஆசிரியர் வேறு எவரும் இல்லை எனலாம்"[23] என்று கிறித்தவக் கல்லூரி இதழ் குறிப்பிட்டது.

இறுதிவரை சாஸ்திரியாரின் நெருங்கிய நண்பராக விளங்கியவர் எம். எல். பிள்ளை. அவர், தாம் 1929 இல் எழுதிய

'தமிழ் இலக்கியம்' (Tamil literature) என்ற ஆங்கில நூலை சாஸ்திரியாருக்கு உரிமையாக்கினார். உ. வே. சாமிநாதஐயரவர்-களுடனும் சாஸ்திரியார் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்.

1. 6 முடிவுரை

சாஸ்திரியாரின் பெருமையை உணர்ந்த திரு வி. கலியாண சுந்தரனார், "......... சாஸ்திரியரால் இயற்றப்பட்ட நூல்கள் தமிழ் அன்னையின் அணிகள். அவைகளுள் ஒன்று 'தமிழ்மொழியின் வரலாறு' தமிழநாட்டில் தமிழ்மொழி வரலாற்-றுக்கு வழிகாட்டியவர் சூரியநாராயண சாஸ்திரியாரென்னும் பரிதிமாற்கலைஞரே. அவர் நீண்டநாள் உலகில் வாழ்ந்திருந்தால் தமிழ் அன்னை இழந்த அரியாசனத்தில் அமர்ந்திருப்பார்; முத்-தமிழும் ஆக்கம் பெற்றிருக்கும்"[24] என்று கூறுவார்.

குறிப்புக்கள்

1. ந சுப்ரமண்யன், வி.கோ. நாராயண சூரிய சாஸ்திரியார், ப. 5.
2. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் (ப. ஆ.), மதுரை மாலை, ப. 2.
3. ந. சுப்ரமண்யன், மு. நூ., ப. 21
4. மேலது, பக். 31-32
5. William Shakespeare, The Complete works of WilliamShakes-peare, pp. 247, 248.
6. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், கலாவதி, ப. 39
7. ந. சுப்ரமண்யன், மு. நூ., ப. 49
8. விளக்குமாற்றால் = விளக்கிக்கூற வேண்டிய முறைப்படி; = துடைப்பத்தால்
9. வ. சு. செ, ஞானபூரணி, முதலியோர் (தொ. ஆ.), தணிகை-மணி டாக்டர் வ. சு. செங்கல்வராய பிள்ளை அவர்கள் வரலாறு, ப 16.
10. ந. சுப்ரமண்யன், அமரர் ந. பலராம ஐயரவர்கள், பக். 39 40
11. ந. பலராம ஐயர், நாடகவியலுரை, பக் xv, xvi
12. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், கலாவதி, பக். 131, 132.
13. எம். எல். பூரணலிங்கம் பிள்ளை, ஞானபோதினி, Vol, VII ஜனவரி 1904.

14. ந. பலராம ஐயர், மு. நூ., ப. xi
15. ந. சுப்ரமண்யன் (ப. ஆ.), பரிதிமாற்கலைஞர் நூற்றாண்டு விழா மலர், ப. 29.
16. வ. சு. செ. ஞானபூரணி, முதலியோர் (தொ. ஆ), மு. நூ., ப. 17
17. விவேக சிந்தாமணி, Vol. XI Number 6, அக்டோபர் 1902, பக், 183, 184,
18. ந. சுப்ரமண்யன், வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார், பக். 103, 104.
19. ஞானபோதினி, ஸம்புடம் V, ப. 78.
20. ந. சுப்ரமணியன், வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், ப. 170
21. மேலது, ப. 170.
22. 'The Hindu', Wednesday, 4th November, 1903, p. 4
23. The Madras Christian CollegeMagazine, Vol. XXI, Number 5, November 1903, pp. 295, 296.
24. திரு. வி. கலியாண சுந்தரனார், திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள், ப. 200

## களஞ்சியம் — புதிய இதழ்

அண்ணா பல்கலைக் கழகம் தங்களது வளர் தமிழ் மன்ற வெளியீடாகப் பதிப்பித்துள்ள களஞ்சியம் என்னும் காலாண்டு இதழ் அறிவியல் கட்டுரைகளையும் நூல்களையும் உருவாக்கும் பாரம்பரியத்தில் ஈடுபடுவதாக முன்வந்துள்ளது. அறிவியலுக்கு மேலை நாட்டை நம்பி அவர் தம் பாட்டையில் தான் செல்ல வேண்டும் எனும் தலைவிதியை மாற்றி புதுவன படைக்கும் அறிவியலாருக்கும் எழுத்துப்பணியிலும் ஈடுபாடு உண்டு பண்ணுதல் நன்று. இதழின் வளர்ச்சிக்கு எமது பாராட்டுகள்.

# நீர் சொல்லும்

— அசாமி

சுவையும் மணமும் தோய்ந்த
பொருளை
நுகர்வது மூக்கு
நோக்குவது கண்கள்
எண்ணுவது உள்ளம்
ஊறுவது வாயில்
ஒதுங்குவது உதட்டில்
சொட்டுவது மார்பில்
எச்சில் துளி என்பீர்!

சுட்டெரிக்கும் பகல் வெயில் —
ஒளிந்ததுவோ குளிர்ந்த நிழல்!
வீழ்வதுவோ கோடாரி!
தாழ்வதுவே நெடியமரம் -
வெட்டுவதாம் விறகு
வெட்டுபவன் மேலே
கொட்டுவதாம் நீர்த்துளி!
பட்டவுடன் வியர்வை என்பீர்!

குளிர்படும் வைகறை —
பகலவன் வரவிலை
கொண்டலின் தண்மை
கொட்டுவது மென்திவலை
கண்ணுக்குத் தெரிவதிலை
ஏந்துவதோ பசும்புல்லின்
எழில் கொஞ்சும் மென் உதடு!
இதன் பெயரே பனித்துளியாம்.

வனப்பும்மதர்ப்பும்வாய்ந்த இளமை
கவர்ச்சியோ காந்தம்
தளிர்மேனி தங்கம்
இளஞ்சிவப்பு ரோஜாவோ
இறுக அணைத்து முத்தமிட்டான்
எச்சிலென்றா கூறுமிதை!
பாலுந் தேனும் கலந்த நீராம்!

துளியெல்லாம் நீர் எனினும்
தோற்றத்தால் ஒன்றெனினும்
மாற்றுப் பெயர் ஏனோ!
பெருமையும் சிறுமையும்
பிறப்பிடத்தால் வருவதோ
நீர் பற்றிய நீர்மை தன்னைப்
பார் அறிய நீர் சொல்லும்!

# ஆன்மீக வெற்றியினை எப்படிப் பெறுவது?

1966-ஆம் ஆண்டு ஆகஸ்டுத்திங்கள் நான்காம் நாள் கண்ணன் பிறந்த நாள். பிரசாந்தி நிலைய நகரப்பகுதியில் ஒரு மருத்துவ விடுதியில் விழா நடந்தது. கூடியிருந்த அனைவரின் முன்னிலையிலும் சாயிபாபா கையை அசைத்து ஒரு பாத்திரத்தை உண்டு பண்ணினார் அதில் சுவையான அமிர்தமும் நிரம்பி வழிந்தது. அந்த அமிர்தச் சுவை நீரை அனைவருக்கும் பாபாவே அளித்தார். தொடர்ந்து சொற்பொழிவும் நிகழ்ந்தது. அதன் ஒரு பகுதியே கீழ்வரும் கருத்தாகும்.

"எடிசன் என்ற விஞ்ஞானி ஏதோ ஓர் ஆராய்ச்சியில் ஈடுபட்டு தன் சோதனைச்சாலையின் கதவை அடைத்துக் கொண்டு பல நாட்கள் தொடர்ந்து சோதனை நடத்தினார். சோதனை முடிவு பெறும் வரை, அவர் கதவைத் திறந்து கொண்டு வெளி வரவில்லை. அவர் உண்ணவேண்டும் என்பதற்காக பால், ரொட்டி, டீ போன்ற உணவுப்பொருள்களைக் கதவின் அடிப்பகுதியின் வழியாக உள்ளே தள்ளினார்கள். சோதனை முடிந்து அவர் கதவைத் திறந்தபோது,அத்தனை நாட்களும் அவருக்காக உள்ளே தள்ளப்பட்ட உணவு வகைகள் அனைத்தும் தொடப்படாமல் அங்கேயே இருந்தன. உலகியல் விஷயங்களைப் பற்றிய விஞ்ஞான ஆராய்ச்சிக்கே அவ்வளவு பொறுப்பும் கடமை உணர்ச்சியும் தேவையென்றால் ஒரு சாதகன் ஆன்மீக வெற்றியைப் பெறுதற்கு எவ்வளவு கடினமான சாதனை மேற்கொள்ள வேண்டும் என்று எண்ணிப் பாருங்கள். எடிசனைப் போன்ற உறுதியான ஒரு நிலைப் பட்டமனமே வெற்றியைத் தேடித்தரும். மனிதன் பொலிவுடலும், லேசான உடலுடனும் இருக்கவேண்டும். ஹரித்துவாரில் கங்கை யில் மிதக்கும் தீபங்களைப் போல உடல் லேசாக இருக்கவேண்டும். கனம் சேர்ந்தால், தீபம் நீரில் அமிழ்ந்து ஒளி கேடுறுவதைப் போல,உலக ஆசைகள் என்றும் சுமை சம்சார சாகரத்தில் உன்னை அமிழ்த்தி விடும்." எனவே அதிலிருந்து விடுபட்டு வாழ்க்கையின் இறுதிக்காலத்திலாவது ஆன்ம சாதனை செய்யக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற கருத்தை இவ்வாறு வெளிப்படுத்தினார் பாபா.

—தாமஸ் ஆல்வா எடிசன் (1847 - 1931) ஒரு அமெரிக்க அறிவியல் நிபுணர். ரயில் நிலையங்களில் தினத்தாள் விற்கும் பையனாக வாழ்க்கையைத் தொடங்கியவர். கிராமபோன், மின் விளக்கு (Bulb) தந்தி அனுப்பும் முறை ஆகியவற்றைக் கண்டு பிடித்தவர்.

# கடல் கடந்த கண்ணன்

— பி. ஆர். ஸ்வாமி.

டாக்டர் மிஸ்ராவின் உதவியுடன் தங்கியிருந்தாலும், பிரபுபாதருக்கும் அவருக்கும் அடிப்படைக் கொள்கையில் வேறுபாடிருந்தது. மிஸ்ரா ஒரு மாயாவாதி. பரிபூரணமான பேருண்மையினை விட மாயை தான் பிரத்தியட்சமான உலகில் சிறப்புடையது என்று எண்ணுகிறவர். பிரபுபாதரோ பிரமம் உள்ளிட்டு படைக்கப்பட்ட உலகத்தின் ஜீவராசிகள் அனைத்தும் எல்லாம் வல்ல பகவானுக்கே ஆட்பட்டவை என்று எண்ணுவது மட்டுமல்ல.அந்தப்பகவானே கண்ணன் என்னும் கொள்கையினைப் பரந்த அளவில்கடல் கடந்தும் பிரச்சாரம் செய்ய வந்த ஆத்மஞானி. இவருக்கு எப்படி மிஸ்ராவின் உதவியும் தொடர்பும் நிம்மதி அளிக்க முடியும்? மனதுக்குப் பொருத்தமில்லாத ஒரு இக்கட்டான நிலையிலிருந்து தப்புவது எப்படி என்று எண்ணிக் கொண்டிருந்தார் பிரபுபாதர்.

கௌடிய மடத்தின் தலைவராக இருந்த சுவாமி தீர்த்த மகராஜ் என்பாருக்கு ஒரு கடிதம் எழுதினார் பிரபுபாதர். அதன் சாராம்சம் இது தான்: "கௌடிய மடத்தின் முன்னாளைய தலைவராக இருந்த பக்தி சித்தாந்தரின் கருத்தே இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய அமெரிக்க நாடுகளுக்கு தமது மடத்தின் சார்பில் துறவியரை அனுப்பிப் பிரச்சார நிலையங்களைத் தொடங்குவது தான். இதனை என்னிடமும் பலமுறை சொல்லியிருக்கிறார். இங்கிருக்கும் மாயாவாதப் பிரிவினர் பொருந்தாத விளக்கம் அளித்துக் கொண்டுள்ளனர். ராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த சுவாமி நிகிலாநந்தா அவர்களிடமும் கலந்து உரையாடினேன். அமெரிக்கர்கள் பக்தியோகத்திற்குக் கட்டுப்பட்டு வருவர் என்றே அவரும் கூறுகிறார். எனவே கௌடிய மடத்தின் கிளை நிலையம் ஒன்றை நிறுவுவதற்குரிய பொருள் உதவியினைத் தாங்கள் அளித்தால், தொடர்ந்து வரும் பணிகளை நான் கவனித்துக் கொள்கிறேன்."

மூன்று வாரங்கள் கழித்து கல்கத்தாவின் கௌடிய மடத்திலிருந்து எதிர்பார்த்துக் கொண்டிருந்த கடிதம் வந்தது. வந்த பதிலோ எதிர்பார்க்காத ஒன்று. பிரபுபாதர் அமெரிக்காவில் இறைமைத் தொண்டு செய்வதைப் பற்றி எந்த வித மாறுபாடான

கிருத்தையும் தெரிவிக்கவில்லை. ஆனால் கௌடிய மடத்தின் பணத்தை அங்கு செலவழிக்க இயலாது என்று கூறிவிட்டார்.

ஜனவரி மாதத்திய பனிக்காலம் தொடங்கி விட்டது. நியூயார்க்கில் ஏழு அங்குல உயரத்திற்குப் பனி கொட்டிக் கொண்டிருந்தது. மணிக்கு ஐம்பது மைல் வேகத்தில் காற்று வேறு வீசிக் கொண்டிருந்தது. இந்தப் பனிப்புயலுக்குப் பயந்து, கென்னடி விமான நிலையத்தை மூடி விட்டார்கள். விமானப் பயணங்கள் தற்காலிமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. ரயில் கார் போக்குவரத்தும் கூட குறிப்பிட்ட சில மணி நேரங்கள் தாம். இந்த நிலையிலும் பிரபுபாதர் கண்ணபிரானின் சிந்தனையோடு மன்காட்டன் தெருவில் உலா வந்து கொண்டிருந்தார். எப்படியாயினும் ராதாகிருஷ்ண கோவிலை எங்காவது அமைத்துக் கொண்டு, பாகவத விளக்கமும் கீதைப் பிரவசனமும் செய்தேயாக வேண்டும் என்னும் ஆர்வம் குறையவில்லை. அமெரிக்காவில் தங்குதற்குரிய காலக் கெடுவும் நெருங்கிக்கொண்டிருந்தது. ஆனால் அதனைப் பற்றியெல்லாம் பிரபுபாதர் கவலைப்படவில்லை. 'எப்படியும் இறைவன் என்னைக் காப்பாற்றி வழி நடத்துவான்' என்பதே அவரது திடமான நம்பிக்கை.

ஜலதூதா கப்பல் பயணத்தில் இதயமே அடங்கி மூச்சற்றுப் போகும் நிலையில் கார்மேக வண்ணன் கைகொடுக்கவில்லையா? அந்தச் சம்பூர்ண தத்துவன் இன்று மட்டும் தள்ளி விடுவானா?—தனக்குத்தானே இந்தக் கேள்விகளைக் கேட்டுக் கொண்டார் பிரபுபாதர்.

அன்றாட அலுவல்களோடு பாகவதம் பயில்வதையும் கீதை படிப்பதையும் நிறுத்துவதே இல்லை. கண்ணன் கீதையில் சொல்கிறான். "எங்கணும், எல்லாப் பொருள்களிலும் என்னைக் காணுகின்றவனுக்கு நான் மிக நெருக்கமானவன்; அவனும் எனக்கு அணுக்கமானவனே"—பக்திவேதாந்தருக்கு இந்த விளக்கம் மிகவும் பொருத்தமாக இருந்தது என்றே சொல்லலாம். இறைவனுக்கு நெருக்கமான எனக்கு என் முயற்சிகளில் எப்படித் தோல்விவரும் என்று தன்னைத் தானே கேட்டுக் கொள்வது பிரபுபாதரின் பழக்கம். ஆயினும் யார் உதவியும் இன்றி தனித்து நிற்கத் தொடங்கியபோது தன்னம்பிக்கை மட்டுமே அவரது சொத்து.

மிஸ்ராவின் ஹடயோக நிலையத்தைக் காலி செய்து விட்டு அதே கட்டிடத்தின் கீழ் மாடியில் 307ஆம் எண்ணுள்ள ஒரு சிறிய அறையில் குடிபுகுந்தார் பிரபுபாதர். தொலை பேசியோ, அமரும் வசதியோ ஏதுமில்லை. நீண்ட சதுரமான சிறியஅறை. தன்னுடைய படுக்கையும், சில நூல்களுமே அவரிடம் இருந்தன. தரையிலேயே படுத்துக் கொள்வார். தனது பெட்டியின் மேலேயே பேப்பர்களை வைத்து எழுதுவார். மிஸ்ராவின் ஆதரவுடன் தங்கியிருந்தபோது சிறிதே பண உதவியும் கிடைத்து வந்தது.கையில் கொண்டு சென்ற பாகவத மொழி பெயர்ப்பு நூல்களை விற்றால் தான் உண்டு. அதுவும் அன்றாடச் செலவுக்கும் மாதம் எழுபது டாலர் அறை வாடகை கொடுப்பதற்குமே இழுபறியாக இருக்கும். கையகல மிளகாய்ப் பொடி இருபத்தைந்து சென்ட் விலைக்கு விற்ற காலம் அது. இந்தியாவில் விற்கப்படும் விலைகளைப் போல ஒவ்வொன்றிலும் பத்து மடங்கு அதிகம். இத்துணைத் தொல்லைகளுககு இடையிலும் ஒரே ஒரு நிம்மதி. யாருடைய உதவியுமின்றி, தன் விருப்பம் போல் பிரச்சாரம் செய்யக்கூடிய வாய்ப்பு. இந்த நிம்மதி பிரபுபாதருக்கு ஒரு அசாதரணமான மன நிறைவைக் கொடுத்தது.

கண்ணனைப் பற்றி இதுவரை அமெரிக்காவில் பேசியதெல்லாம், சொற்பொழிவு செய்தது எல்லாம், எங்கேயோ இருந்து கொண்டு யார் யாரோ வந்து பார்த்தவர்களுக்குத்தான். அதில் என்ன பயன்? தனக்கென்று அன்பர்கள் கூட்டம் பக்தியுணர்வோடு அன்றாடமோ குறிப்பிட்ட நாட்களிலோ வந்தால் தான் எண்ணி வந்த காரியத்தைச் செயற்படுத்த முடியும் என்று எண்ணினார் பிரபுபாத சுவாமிகள். ஹரே கிருஷ்ண மந்திரத்தை வாயாரச் சொல்ல வேண்டும். நான் கொடுக்கும் பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டு பாகவதம் பற்றியும், கீதை குறித்தும் எனது கருத்துகளைக் கேட்கவேண்டும். அப்படியொரு ஆன்மீகச் சூழ்நிலையை இங்கு உண்டு பண்ணியாக வேண்டும்' — இப்படித் திட்டமிட்டார் சுவாமிகள். இந்த நிலைமை வேண்டுமாயின், ஒரு சிறிய கோவிலாவது இருக்க வேண்டுமே!

அவர் இருந்ததோ ஏழ்மையைத் துல்லியமாகக் காட்டும் ஒரு சிறிய அறை. கம்பளி இல்லாத வெறுந்தரை. அங்கு அமர்ந்து வேதாந்தம் கேட்க யார் வருவர்? அதுவும் அமெரிக்காவில்! மிஸ்ராவின் மாணவர்களில் ஒருவர் ஒலிப் பதிவுக் கருவியினையும்

நாடாவையும் (Tape - recorder) சுவாமிகளுக்கு அன்பளிப்பாகக் கொடுத்திருந்தார். தாமே தாளம்போட்டு வாயாரப் பாடிய கிருஷ்ண பஜனைப் பாடல்கள் மூன்றனை ஒலிப்பதிவு செய்திருந்தார் சுவாமிகள். யார் வந்தாலும் வராவிட்டாலும், வாரத்தில் மூன்று தினங்கள் தமது அறையிலேயே டேப் ரிக்கார்டை இயக்கிக் கொண்டே வழிபாடுசெய்வது என்று முடிவு செய்தார். தொடக்கத்தில் மிஸ்ராவின் மாணவர்களும் அவர்கள் மூலம் அறிமுகமாகிய வெகு சிலரும் வந்தனர். மங்கிக்கிடந்த நம்பிக்கை துளிர்விடத் தொடங்கியது.

நியூயார்க் நகரில் பவரி எனும் பகுதியில் (Bowery) கிழக்கு ஏழாம் தெருவில் பாரடாக்ஸ் என்னும் விசித்திரமான ரெஸ்டாரன்ட் ஒன்று இருந்தது. தெரு மட்டத்துக்குச் சற்று கீழே இருந்த அதனுள் சில மேஜைகளும், அதனைச் சுற்றி சில நாற்காலிகளும் போடப்பட்டிருந்தன. கீழை நாட்டுத் தத்துவம், மதம், ஒழுக்கம், நீதி நூல்களைப் பற்றிப் பேசுகின்ற வாடிக்கையாளர்களே அங்கு வந்து போய்க் கொண்டிருந்தனர். ஒன்றுமே உண்ணாமல் நாள் முழுதும் அமர்ந்து பேசிக் கொண்டேயிருந்தாலும், யாரும் தடுப்பதில்லை. கேட்கும் போதெல்லாம் தேநீர் மட்டும் இலவசமாகவே கொடுப்பார்கள். விடுதியின் பெயருக்கேற்ற பொருத்தமான செயல். அத்தகைய ஒரு விசித்திரமான தேநீர் சாலைக்கு வருவோரில் ஹார்வே ஹோகன் என்னும் பத்திரிகையாளரும் ஒருவர். இந்தியா போன்ற ஆசிய நாட்டிலிருந்து அமெரிக்கா வந்துள்ள சுவாமியார்களைப் பற்றிய பேச்சு வந்த போது ஹார்வே மோகன் தான் பிரபுபாதரைப் பற்றிக் கூறினார். பத்திரிக்கையாளருக்குத் தெரியாத செய்தியா? அதுவரை இந்தியத் துறவிகளை சுற்றி வந்து யோகம், தத்துவம், மதம் பற்றிக் கேட்டுக் கொண்டிருந்த கூட்டம் யாரெனில் கிழடுகளும் பணக்கார விதவைகளும் தான். கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்றிருந்த லௌகீக வாழ்க்கை அலுத்துப்போய் ஆன்மீக விசாரணையில் இறங்கிய கூட்டம் அது. பிரபுபாதரைப் பற்றி தேநீர் சாலையில் பேசிய ஹார்வேஹோகனும் அவரது அத்தியந்த நண்பர்களுமே இளைஞர்கள். மன்காட்டன் பகுதியிலிருந்த பிரபுபாதரைத் தங்களுக்குப் பழக்கமான பவரி பகுதிக்குக் கொண்டுவந்துவிடவும் அவர்கள் முடிவு செய்தார்கள்.

இதற்கிடையில் பிரபுபாதர் தங்கியிருந்த 307 - ஆம் எண்ணுள்ள அறையில் ஒரு திருட்டு நடந்து விட்டது. சுவாமிகள்

தங்கியிருந்த அறையின் கண்ணாடிக் கதவினை உடைத்துக் கொண்டு உட்புகுந்து தட்டச்சுப் பொறியினையும் டேப் ரெக்-கார்டையும் யாரோ எடுத்துக் கொண்டு போய்விட்டனர். இந்தக் கட்டிடத்தின் வாயிற்காப்போன் சொன்ன முறையினைப் பார்த்த சுவாமிகளுக்கு அவனே திருடியவன் என்று தெரிந்து விட்டது. கிருஷ்ண பஜனைக்கு வந்து கொண்டிருந்த ஒருவர் புதிய தட்டச்சுப் பொறியினையும், டேப்ரெக்கார்டையும் கொடுத்தார். இருந்தாலும், மீண்டும் அவை திருட்டுப்போகாமல் இருக்கும் என்பதற்கு என்ன உத்தரவாதம்? பாதுகாப்பு இல்லாத இந்த இடத்தை விட்டு புதிய பகுதியாகிய பவரிக்குப் போவதே பொருத்தம் என்று முடிவு செய்தார் சுவாமிகள்.

இந்தப் புதிய பகுதியில் வந்து சேர்ந்த ஹார்வே கோஹன் எனும் புதிய சீடனே தன்னுடைய சிறிய அறையினை சுவாமி-களுக்குக் கொடுத்து விட்டான். சுவாமிகளோ பாகவதத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பைத் தொடர்ந்து செய்து கொண்டி-ருந்தார். கண்ணனுக்குக் கோயில் அமைக்கும் பணியைப் பற்றிய சிந்தனையும் மறையவில்லை. பவரி பகுதிக்கு சுவாமிகள் குடி-வந்த செய்தி விசித்திரமான தேநீர் விடுதி வட்டாரங்களில் வெகு வேகமாகப் பரவிவிட்டது. இங்கு வருகின்ற இளைஞர்கள் சுவாமிகளைக் காணாமலோ உரையாடாமலோ திரும்பிப் போவதில்லை.

பிரபுபாதரின் கிருஷ்ண நாம சங்கீர்த்தனமே பற்பல இளைஞர்களைக் கவர்ந்தது! பஜனையைத் தொடர்ந்து நிகழும் பாகவத சொற்பொழிவினையும் கேட்ட பின்பே கலைந்து செல்வர். மங்கிய ஒளியில் ஊது பத்தியின் மணம் கமழ கண்ணன் படத்-துக்கு அருகில் சுவாமிகளே பஜனையைத் தொடங்குவார். தாடியும் மீசையும் பரட்டைத் தலையுமாக இருந்த சிற்சில இளைஞர்களும் கூட மெய்ம்மறந்து சுவாமிகளின் ஆன்மீகப் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டனர். நாளாவட்டத்தில் அவர்களும் பஜனை செய்யத் தொடங்கி விட்டனர். இளைஞர்-களின் இந்த ஆன்மீக ஒருமைப்பாடு சுவாமிகளுக்கு மகிழ்ச்சியை அளித்ததோடு புதிய தெம்பையும் மனநிம்மதியையும் கொடுத்தது.

கண்ணனின் நாமத்தை இசையுடன் ஒலித்தலே ஆன்மீகத் தொண்டர்கள் செய்ய வேண்டிய தலையாய பணி. கிருஷ்ண நாமம் தான் முக்கியமே தவிர அது எந்த இசையில் வந்தாலும்

குற்றமில்லை. நாட்டுப்பாடலோ, ஜாஸ்மியூசிக்கோ, டப்பாங்குத்துப் பாடலோ, மெல்லிசையோ, எதுவாயினும் கிருஷ்ண நாமத்துக்கு விலக்கு இல்லை என்பதே பிரபுபாதரின் கருத்து. மதுக்குடியலைப்பற்றியோ கண் விழிப்புப்பற்றியோ கவலைப்படாத இளைஞர்கள் வாழும் பகுதி அது. மிதமிஞ்சிக் குடித்தவர்கள் சிற்சில சமயங்களில் பாதையை அடைத்துக்கொண்டு மயங்கிக் கிடப்பார்கள். கிண்டலாகப் பேசிக்கொண்டே சிலர் வழி விடுவதும் உண்டு. ஆனால் காவி உடையும், கையில் குடையும் கொண்டு கிருஷ்ண பஜனை நடத்தும் பிரபுபாத சுவாமிகளை யாரும் தொந்தரவு செய்தது கிடையாது.

— தொடரும்

---

## ஆட்சிச் சொல் காவலர் மறைவு.

தமிழைப் பயிற்று மொழியாகக் கொள்ள வேண்டும் என்று அரசு முடிவு செய்த காலந்தொட்டு, அதனை அலுவலகங்களிலும் அரியணையேற்றிய பெருமை கீ. இராமலிங்கனார் அவர்களையே சாரும். தமிழ்த்தென்றல் திரு. வி க. வின் மாணவராகத் திகழ்ந்த இராமலிங்கனார் ஈரோடு, திருச்சி ஆகிய பெருநகரங்களில் நகர் மன்ற ஆணையராகப் பணி புரிந்து ஓய்வு பெற்றவர்கள். பின்னரும், தருமபுர ஆதீனத் தமிழ்க்கல்லூரியில் முதல்வராகச் சில ஆண்டுகள் பணியாற்றினார்கள். இனிய தமிழில் சொற்பெருக்காற்றும் திறம் படைத்தவர்கள். ஆட்சிச் சொல் பற்றிய இவர்களது நூல் சைவ சித்தாந்தக் கழகத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது. மதுரைப்பல்கலைக்கழகம் தமிழ்ச்செம்மல் என்று பட்டமளித்து இவர்களை பேரவை உறுப்பினராக்கியது குறிப்பிடத்தக்கது. அண்மையில் காலஞ் சென்ற ஆட்சிச் சொல் காவலரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள் உரியன.

— ஆசிரியர்.

# மொழி பெயர்க்கும் தொலை பேசி

உலகநாடுகளின் பேரவையான ஐக்கிய நாடுகள் சபையில் ஏற்கப்பட்டுள்ள மொழிகள் ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிஷ், சீனம், ரஷ்யன். உறுப்பினர்கள் இவற்றில் எந்த மொழியில் பேசினாலும் உடனுக்குடன் பிற மொழிகளில் அவை மொழி பெயர்த்துக் கொடுக்கப்படுகின்றன. டில்லி பாராளுமன்றத்தில் அவைத் தலைவரோ உறுப்பினரோ ஆங்கிலம் அல்லது இந்தியில் பேசினால், அதனைப் பிற சிற்சில இந்தியமொழிகளில் மொழி-பெயர்த்துத் தரும் வசதிகள் உள்ளன. மொழி பெயர்ப்புப் பணி தனிப்பட்டோர் செய்யும் நிலையிலிருந்து மாறி இற்றை நாட்-களில் கணக்கியற் பொறிகளே (computer) செய்யும் நிலைக்கு வளர்ந்து வருகிறது. இன்னும் சில ஆண்டுகளில் தொலைபேசி, கேபிள் வழியாக ஒரு நாட்டிலிருந்து பேசப்படும் ஒரு மொழியினை அடுத்த நாட்டுக்காரர் தமது மொழியில் கேட்குமாறு தொலை-பேசியே மொழி மாற்றம் செய்யத் தரும் நிலைக்கு ஆய்வுகள் நிகழ்த்தப் பெறுகின்றன. சான்றாக சென்னையிலிருந்து ஒருவர் தமிழிலோ, ஆங்கிலத்திலோ ஜப்பான் நாட்டுக்காரருடன் பேசு-வதாகக் கொள்வோம். இங்கிருந்து பேசப்படும் மொழி இயந்திர கதியிலேயே பெயர்க்கப்பட்டு ஜப்பானியருக்கு ஜப்பான் மொழியே காதில் விழும். அவர் கூறும் ஜப்பானியப் பதில் சென்னையில் இருப்பவருக்குத் தமிழாகவோ ஆங்கிலமாகவோ மாறி வரும். நம்பமுடியாத விந்தையாக இருக்கிறது அல்லவா?

இந்த இயந்திர மொழி பெயர்ப்பு ஆய்வினைச் செய்வதற்-கென்றே அமெரிக்க, ஐரோப்பிய, ஜப்பானியப் பல்கலைக் கழகங்-கள் ஏராளமான பணத்தைச் செலவிட்டு வருகின்றன. ஜப்பானிய அரசும், நிப்பான் டெலிபோன் கார்ப்பொரேஷனும் சேர்ந்து இந்த ஆய்வுக்கு என்று 12 கோடி ரூபாய் உதவித் தொகை வழங்கி-யுள்ளன. பிரத்தியேகமான இத்தகைய தொலைபேசிகள் இயங்கும் போது கம்ப்யூட்டரோடு இணைத்து விடப்படும் என்று தெரிகிறது. ஏனெனில் மொழி பெயர்ப்புப் பணியைச் செய்ய விருப்பது கம்ப்-யூட்டர் தான். தானாகவே இயங்கும் மொழி பெயர்ப்புத் தொலை-பேசிகள் எதிர்காலம் காண இருக்கின்ற பிறிதோர் அறிவியல் விந்தையாகும்.

— நன்றி : நியூஸ்வீக் — Oct. 20

# நூல் மதிப்புரை

(1) — சிவப்பு ரோஜாப் பூ
(கவிதைகள்)
ஆசிரியர் : தம்பி சீனிவாசன்
வெளியீடு : வானதி பதிப்பகம்
தியாகராய நகர்
சென்னை - 17
விலை : ஆறு ரூபாய்

குழந்தையைப் பற்றியப் பாடற் குறிப்புகளை பண்டைய இலக்கியங்களிலும் காண்கிறோம். இறைவனையே குழந்தையாகப் பார்த்தமையான் பிறந்ததே - பிள்ளைத்தமிழ். ஆனால் அந்தப் பிரபந்த இலக்கியத்தைப் பிள்ளைகள் யாரும் படித்து விடமுடியாது. கற்றறிந்தோர் படிக்கலாம். புரிந்து கொள்கிறார்களா என்பது வேறு. இறைவனைப்பிள்ளையாக்கி அதுபற்றிய பாடலைக் கடுமை யாக்கிய தமிழ் நாட்டில் பிள்ளைகளுக்கே கவிதை எழுதத்தொடங்கி யது பிற்காலத்தில் தான். குழந்தைளுக்காக எழுதவேண்டும் என்பது ஒரு இயக்கமாகியதும் இக்காலத்தே தான். பல்துறை இலக்கிய வளர்ச்சியில் மழலைச் செல்வங்களுக்காகவும் பாடல் எழுதுவது ஒரு மறுமலர்ச்சி. குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் குறிக்கோளும் அதுதான். அதனுடைய வளர்ச்சிக்குப் பாடுபட்டு வரும் உயர்திரு தம்பி சீனிவாசன் அவர்களின் சிவப்பு ரோஜாப்பூ முப்பத்தேழு குழந்தைப் பாடல்களை உள்ளடக்கிய ஒரு கவிதைத் தொகுப்பு.

ஐந்து பிரிவுகளாக அமைந்திருக்கும் இக்கவிதைகள் சொல்லின் எளிமை, பொருட் செறிவு கருதி நிரல்பட அமைந்துள்ளன. சொற்களை மட்டும் வைத்து உப்புச்சப்பில்லாமல் கவிதையை நிமிர்த்தி வைத்தவர்களும் உண்டு. Limerics என்று கூறப்படும் கோமாளித் தனமான கவிதைகளை எட்வர்ட் லியர் ஆங்கிலத்தில் புனைந்துள்ளார். ஆனால் அப்படியின்றி சிறுகுழந்தை களுக்காக அவர்களே புரிந்து கொள்ளும் வகையில் சொல்லழகும் பொருள் தெளிவும் புலப்படுமாறு எளிய இனிய கவிதைகளைத் தம்பி சீனிவாசன் அவர்கள் படைத்துள்ளார்.

அரிசி வேணும், பருப்பு வேணும்
அல்வா ஆக்க சீனி வேணும்

என்று எந்தக்குழந்தை தான் இதனைப்படித்து ரசிக்காது! பாடலின் பொருளும் சுவை பாடல் சுட்டிக்காட்டும் அல்வாவும் சுவை! 'காட்டுப்பாக்கம் தாத்தா'-படித்து மகிழாத குழந்தை இருக்க முடியாது. பிஞ்சு உள்ளமும் இலக்கியச் சுவையினை அனுபவிக்குமாறு கற்பனையையும் கலந்துள்ள நயம் பாராட்டத்தக்கது.

'ஏதோ இருக்கு பாட்டி கதையில்
என்ன தெரிந்து சொல்வீரோ'

என்று கூறும் கவிஞர்

வேதாந்தமாக விரித்துப் பொருளுரைக்க
யாதேனுஞ் சற்று இடமிருந்தால் கூறீரோ

என்னும் குயிற்பாட்டை நினைவுபடுத்துகிறார்.

பின்னிருந்து கிட்டு தள்ள
பெரியசாமி பிடிக்கிறான்
முத்து சற்றுச் சாய்க்கிறான்' என்றுவரும் பகுதி

"முன்னே கடிவாளாம் மூன்று பேர் தொட்டிழுக்கப்
பின்னே இருந்திரண்டு பேர் தள்ள - எந்நேரம்
வேதம் போல் வாயன் விகடராமன் குதிரை
மாதம் போம் காதவழி" என்னும்

நகைச்சுவைப் பாடலை நினைவூட்டுகிறது. அதேபோன்று 'எட்டடுக்கின் - உச்சி மீதில்' என்னும் கவிதையில் நான்காம் பாடலைத் தவிர மீதம் அனைத்தும் சந்தப்பாட்டு மாதிரி 'ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே' என்று சொல்லத் தோன்றுகிறது. நகைச்சுவை, கற்பனை மட்டுமன்றி இளஞ்சிறுவர்க்குச் செய்தியாகவும் பொது அறிவைப் பெருக்கும் முறையிலும் அமைந்த செஞ்சிலுவைச் சங்கம், சின்னக்கண்ணன் ஆகியனவும் அருமையான பாடல்களே! கோபுலுவின் கைவண்ணம் நூலுக்கு அழகு சேர்க்கின்றது. அறிவும் அழகும் சேர்ந்த இச்சிறு கவிதைப் பெட்டகம் இரண்டாம் பதிப்பாக வெளிவந்திருப்பதில் வியப்பொன்றுமில்லை.

— அசாமி.

(2)

தமிழர் அறிவுக் கோட்பாடு

— பேராசிரியர் : நாராயணன்

வெளியீடு : தமிழ்ப் புத்தகாலயம்

சென்னை - 5 :

தனிப்பட்டோரைப் பார்த்து, தோன்றிற் புகழோடு தோன்றுக எனும் வள்ளுவர் பெருந்தகை, தன்மைப் பன்மையில் பெற்றோரை நோக்கிக் கூறுவாராய் "பெறுமவற்றுள் யாமறி-வதில்லை அறிவறிந்த மக்கட்பேறல்ல பிற" என்றும், பிறப்பி-னாலே சிறந்த அறிவினைப் பெறாவிடினும், காலப் போக்கில் கற்றுத் தேர்வதனாலும் அறிவினைப் பெறலாம் என்றே 'கற்றனைத் தூறும் அறிவு' என்றும் அறிவின் வளர்ச்சியை வகைப்படுத்தியுள்ளார். அறிவின் வளர்ச்சிக்கு ஒரு எல்லையில்லை, இருப்பின், 'அறிதோறும் அறியாமை கண்டற்றால்' எனும் கூற்றே பிறந்திருக்காதே! மக்களை மாக்கள் நிலையினின்றும் வேறு படுத்தும் அறிவு இருந்தாலொழிய அரசனும், பெற்று வளர்த்த தாயும் கூட ஒருவனை மதியார் என்கிறது புறநானூறு. 'வால-றிவன்' எனும் வள்ளுவரும், சுத்த அறிவே சிவம்' எனும் பாரதி-யும் அறிவினை ஆன்மீகத்தின் உச்சி நிலைக்கு உயர்த்தி விடு-கின்றனர். ஆயினும், அறிவினைப் பற்றிய வழிமுறை, இயல்பு ஆகிய அனைத்துச் செய்திகளையும் பண்டைத் தமிழிலக்கியங்கள் கூறினும், அதனை ஒரு கோட்பாடாகக் கொண்டு நெறி முறை-யான நூல்கள் ஏதும் தமிழில் இயற்றப்பெற இல்லை என்னும் குறையினை 'தமிழர் அறிவுக் கோட்பாடு' எனும் இந்நூல் போக்கி விடுகின்றது.

பேராசிரியர் நாராயணன் அவர்கள் தமது இனிய நூலில் தமிழ், வடமொழித் தத்துவங்களில் அறிவுக்கோட்பாடு பற்றி சீர் பெற ஆய்வு செய்கின்றார். நூலின் கருத்தும் கட்டமைப்பும் தேர்வு பெற அமைந்துள்ளன. மேலை நாட்டுத் தத்துவங்களின் புற உலக ஆய்வும், நம்நாட்டுக்கே உரிய ஆன்ம விசாரணையும் இணைந்தே பண்டைத் தமிழர்களின் தத்துவக் கோட்பாடு

அமைந்துள்ளது என்பதை இந்நூல் நிறுவுகிறது. 'வேதமறுப் புத்தத்துவங்களில்' என்னும் தலைப்பின் கீழ் வேத காலத்தில் உயிர்ப் பலி முறை முற்றுமாக வெறுத்து ஒதுக்கப்படவில்லை என்று வரும் கருத்து உயிர்க்கொலையே ஆகாது என்னும் பண்டைத் தமிழர் கருத்துக்கு முற்றிலும் மாறுபட்டது என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. ஆங்கிலத்தில் பயின்று வரும் பற்பல கலைச் சொற்-களுக்கு உரியனவாக இந்நூலாசிரியர் பயன்படுத்திய பற்பல தமிழ்ச் சொற்களைப் பிறரும் ஏற்றுப் பயிலும் வண்ணம் தொகுத்து நூலின் பின் இணைப்பாகச் செய்திருக்கலாம். தமிழர் தம் தத்துவக் கருத்துகளுக்கு வட நூல் முறையே ஆதாரம் என்னும் வாதத்தைப் பொருத்தமற்றதாக்கும் இந்நூல் கல்லூரிகளில், குறிப்பாக தத்துவ இயலைப் பயிலும் இடங்களில் பாடநூலாக வைக்கத் தகுவது. இந்த அரிய நூலை ஆக்கித் தந்த பேராசிரியர் நாராயணன் பெரிதும் பாராட்டத்தகுவர்.

— பழனி. அரங்கசாமி

(3)

| | | |
|---|---|---|
| நூல் | : | நாமதேவர் |
| தமிழில் | : | சரஸ்வதி ராம்நாத் |
| வெளியீடு | : | சாகித்திய அக்காதெமி<br>29, எல்டாம்ஸ் சாலை<br>சென்னை - 18. |

இந்திய ஒருமைப்பாடு பல்வேறு வகையாலும் வற்புறுத்தப் படுகின்ற இற்றை நாட்களில் நாமதேவரின் வாழ்க்கையும் ஆன் மீகப் பாடல்களும் இன்றியமையாதவை ஆகும். தமிழகத்தில் ஐந்து வயதினிலேயே கந்தர்கலி வெண்பா பாடி பின்னர் வடநாடு சென்று பாதுஷாவிடம் பெருமையும், சிறப்பும் பெற்ற குமரகுருப ரைப் போன்று நாமதேவரும் மொழி, இனம் கடந்து இந்த நாட்டினை ஆன்மிகப் பற்றினால் இணைத்திருக்கிறார். மராட்டிய மாநிலத்தில் பதினான்காம் நூற்றாண்டில் தோன்றிய இப்பெரும் துறவியார் பஞ்சாப்பில் சென்று வாழ்வின் பெரும் பகுதியைக் கழித்திருக்கின்றார். பஞ்சாபி மொழியும் கற்றுச் சிறந்தமையி னாலே இவரது பாடல்களில் மராத்திய, பஞ்சாபி மொழிச் சொற்கள் மிகுதியும் காணப்படுகின்றன. எல்லாம் வல்ல இறைவனை உணர்ச்சி பூர்வமாக வணங்குவதற்கு மொழி ஒரு தடையல்லவே! சீக்கிய சம்பிரதாயத்தின் முதல் நூலான ஆதி-கிரந்தத்தில் நாமதேவரது அறுபத்தி ஓர் பாடல்கள் இடம் பெற்

றுள்ளன. இவர் காலத்திற்குப் பின்னர் இருநூறு ஆண்டுகள் கழிந்த பின்னரே குருநானக் தோன்றினார். நாமதேவரின் பாடல்கள் நாட்டுப்புறக் கொச்சை மொழியில் எழுதப்பட்டுள்ளதால், அந்தக் காலத்தே இம்மகானது பாடல்கள் பாமர மக்களிடையிலும் பரவலாகப் புழங்கியிருக்க வேண்டும் என்று தெரிகிறது இந்நூலின் தமிழ் நடையில் வடசொற்கள் மிகுந்து காணப்படுவதனைக் குறை கூற முடியாது. ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த இப் பெரியாரைப் பற்றிய பிற செய்திகள் அதிகம் கிடைக்காத நிலையில், நூல் முழுதும் அவரது கவிதைகளைப் பற்றிய விளக்கமாகவே அமைந்துள்ளது. இன்றியமையாத ஒரு சில இடங்களில் அவரது பஞ்சாபி மொழிப் பாடல்களைத் தமிழில் அப்படியே எழுதியிருப்பது சுவைபயக்கின்றது. இந்திய ஒருமைப்பாடு பற்றிப் பேசுவோருக்கு நாமதேவரது வாழ்வும் வாக்கும் துணை நிற்கும்.

(4) —ஜெயசங்கர் பிரசாத்

—மு சி. கேசவன்

சாகித்திய அக்காதெமி

சென்னை-18

இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தே வாழ்ந்த இந்தி மொழிக் கவிஞரும், நாடக ஆசிரியரும், நாவலாசிரியரும் ஆகிய ஜெய்சங்கர் பிரசாத் பற்றிய ஒரு கட்டுரை முன்னமேயே செந்தமிழ் இதழில் வெளியாகி உள்ளது.

சாயாவாதம் என்னும் புதிய இலக்கிய உணர்வினைத் தோற்றுவிப்பதற்குக் காரணமாக இருந்த ஜெய்சங்கர் பிரசாத் ஏழு கவிதைத் தொகுதிகளும், பதின்மூன்று நாடகங்களும், ஐந்து சிறு கதைத் தொகுப்புகளும், மூன்று புதினங்களும் திறனாய்வும் படைத்துள்ளார். நாற்பத்தெட்டு ஆண்டுகள் வாழ்ந்தாலும், அவரது படைப்பிலக்கியம் தொடங்கியபோது அவருக்கு வயது 21. எனவே இருபத்தொன்பது ஆண்டு காலத்தில் இவரது படைப்புகளைக் காணும்போது எழுதவும், படிப்பதும், சிந்திப்பதுவுமே தொழிலாக இருந்துள்ளார் என்று ஊகிக்க முடிகிறது. ஜெய்சங்கர் பற்றிய ஆய்வு நூல்களையும் பயின்று அரிதின் முயன்று எழுதப்பட்டுள்ள இந்நூலின் மேற்கோள்கள் படித்து இன்புறத்தக்கன என்பதில் ஐயமில்லை. இந்தி மொழியில் பல்வேறு படைப்புகளை ஈந்த ஜெய் சங்கர் பிரசாத் பற்றிய இக்கையடக்கமான நூல் பிற இந்திய மொழிகளிலும் பெயர்த்தெழுதப்படுதல் அவசியமாகும்.

## சங்கச் செய்திகள்

## மதுரைத் தமிழ்ச் சங்கத்

## தமிழ்த் தேர்வு பற்றிய செய்திகள்

*மாநில அளவில் ரொக்கப் பரிசு பெற்றவர்கள் பற்றிய குறிப்புகள்:*

1985-86 ஆம் ஆண்டில் உயர்நிலை - மேல்நிலைப் பள்ளி பத்தாம் வகுப்பு - பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய தமிழ்த் தேர்வில மாநில அளவில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்கள் பற்றிய விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. மாநில அளவில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்களையும், ஒவ்வொரு பள்ளியிலும் முதன்மையாகத் தேர்ச்சி பெற்று நூற்கள் பரிசு பெற்ற மாணவர்களையும் பிற மாணவர்களையும் மதுரைத் தமிழ்ச் சங்கச் சார்பில் வாழ்த்துகிறோம். மதுரைத் தமிழ்ச் சங்கத் தமிழ்த்தேர்வில் ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான மாணவர்களைக் கலந்து கொள்ளச் செய்து வரும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் தமிழாசிரியர்களுக்கும் பிற ஆசிரியர்களுக்கும் எங்களது அன்புகனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

### ரொக்கப் ப்ரிசு பெற்றவர்கள் பற்றிய விபரம்

10-ஆம் வகுப்பு (எஸ்.எஸ்.எல்.சி) *தமிழ்த் தேர்வில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்கள் விபரம்:*

| வ. எண். | மாணவர் பெயர், பள்ளி முகவரி | மதிப்பெண் 200க்கு | பரிசு விபரம் | பரிசுத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | கு. இலலிதா<br>அரசினர் மகளிர் உயர்பள்ளி<br>பெண்ணாடம் | 188 | முதல் பரிசு | 100-00 |

| வ. எண். | மாணவரின் பெயரும் பள்ளி முகவரியும் | மதிப்பெண் 200க்கு | பரிசு விபரம் | பரிசுத் தொகை |
|---|---|---|---|---|
| 2. | எஸ். நிர்மலா<br>என்.எல்.சி. மகளிர் மேல்நிலைப் பள்ளி<br>நெய்வேலி-3 | 183 | இரண்டாம் பரிசு | 50-00 |
| 3. | இரா. சுந்தரமூர்த்தி<br>அரசினர் உயர்பள்ளி<br>புதூர் பாளையம் | 179 | மூன்றாம் பரிசு | 25-00 |
| 4. | வி. ராஜலெட்சுமி<br>என்.எல்.சி. மகளிச் மேல்நிலைப் பள்ளி<br>நெய்வேலி-3 | 178 | ஆறுதல் பரிசு | 10-00 |
| 5. | ஜி. ஜெயந்தி<br>கலியாணசுந்தரம் மேல்நிலைப் பள்ளி<br>தஞ்சாவூர் | 177 | ஆறுதல் பரிசு | 10-00 |
| 6. | டி. சுதாபாலின்<br>என்.எல்.சி. மகளிர் மேல்நிலைப் பள்ளி<br>நெய்வேலி-3 | 177 | ” | 10-00 |
| 7. | வி. மேரிபிறமிலா சாந்தி<br>குழந்தை இயேசு உயர்பள்ளி<br>முளகு முடு | 176 | ” | 10-00 |
| 8. | கே. அல்லி<br>என்.எல்.சி. மகளிர் மேல்நிலைப் பள்ளி<br>நெய்வேலி-3 | 176 | ” | 10-00 |

| | | | |
|---|---|---|---|
| 9. ஜி கார்த்தியாயணி பரிசுத்த அந்திரேயா மகளிர் மேல்நிலைப் பள்ளி இராமநாதபுரம் | 176 | ஆறுதல் பரிசு | 10-00 |
| 10. வி ஜி. லட்சுமி பிரியா சௌராட்டிரா மகளிர் மேல்நிலைப் பள்ளி மதுரை-9 | 176 | ” | 10-00 |
| 11. க. திருமலை ராஜன் தூயயோவான் மேல்நிலைப் பள்ளி பாளையங்கோட்டை | 175 | ” | 10-00 |
| 12. பி முருகானந்தம் கலியாணசுந்தரம் மேல்நிலைப் பள்ளி தஞ்சாவூர் | 175 | ” | 10-00 |
| 13, எக்ஸ். தாமஸ் அல்போன்ராஜ் ஸ்ரீ சரசுவதி உயர்பள்ளி கோனாபட்டு | 175 | ” | 10-00 |
| 14. கே முத்துவேல் புனித அருளானந்தர் உயர்பள்ளி ஓரியூர் | 175 | ” | 10-00 |
| 15. வி. வேல்முருகன் கம்பர் மாநகராட்சி உயர்பள்ளி மதுரை-11 | 175 | ” | 10-00 |
| 16. செ. செந்தமிழ்ச்செல்வி அரசு மகளிர் உயர்பள்ளி கதிர்காமம், புதுவை | 175 | ” | 10-00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 17. | எ. யாஸ்மின்<br>அரசினர் மகளிர் மேல்நிலை மற்றும்<br>ஆசிரியப் பயிற்சி நிறுவனம்<br>நாமக்கல் | 175 | ” | 10-00 |
| 18. | ஆ. ஹிரமேஷ்<br>அரசினர் மேல்நிலைப் பள்ளி<br>இலால்குடி | 175 | ” | 10-00 |
| 19. | டி. அனுராதா<br>பி.கே.என். மகளிர் மேல்நிலைப்<br>பள்ளி<br>திருமங்கலம் | 175 | ” | 10-00 |
| 20. | கே. புவனேஸ்வரி<br>ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வரர் மகளிர்<br>மேல்நிலைப் பள்ளி<br>மதுரை-9 | 175 | ” | 10-00 |
| 21. | எஸ். சந்திரா<br>கேப்ரன்ஹால் மகளிர் மேல்-<br>நிலைப் பள்ளி<br>மதுரை-10 | 175 | ” | 10-00 |

12-ஆம் வகுப்புத் தமிழ்த் தேர்வில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்களின் விபரம்

| வ. எண். | மாணவரின் பெயரும் பள்ளி முகவரியும் | மதிப்பெண் 200க்கு | பரிசு விபரம் | பரிசுத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | வி. ஜீவானந்தம்<br>அரசினர் மேல்நிலைப் பள்ளி<br>ஜோகில்பட்டி, கல்குறிச்சி | 183 | முதல் பரிசு | 100-00 |
| 2. | ச. வள்ளி<br>என்.எல்.சி. மகளிர் மேல்நிலைப்<br>பள்ளி<br>நெய்வேலி-3 | 180 | இரண்டாம் பரிசு | 50-00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | மா. அழகு மீனாள்<br>புனிதவளனார் மெட்ரிக் மேல்-<br>நிலைப் பள்ளி<br>மதுரை-9 | 179 | மூன்றாம் பரிசு | 25-00 |
| 4. | பா. மகாலெட்சுமி<br>புனிதவளனார் மெட்ரிக் மேல்-<br>நிலைப் பள்ளி<br>மதுரை-9 | 178 | ஆறுதல் பரிசு | 10-00 |
| 5. | இரா. கமலா<br>சி.நா. ராமசாமிராஜா மேல்-<br>நிலைப் பள்ளி<br>ஸ்ரீகோமதிபுரம் | 177 | ,, | 10-00 |
| 6. | எம். மோகன்குமார்<br>இந்து மேல்நிலைப் பள்ளி<br>ஆம்பூர் | 177 | ,, | 10-00 |
| 7. | க. ரேணுகா<br>புனித வளனார் மெட்ரிக் மேல்<br>நிலைப் பள்ளி,<br>மதுரை-9 | 177 | ,, | 10-00 |
| 8. | சோ. சங்கர சுப்பிரமணியன்<br>சி.நா. ராமசாமி ராஜா மேல்-<br>நிலைப் பள்ளி<br>ஸ்ரீ கோமதிபுரம் | 176 | ,, | 10-00 |
| 9. | ஆர். சொக்கலிங்கம்<br>மேல் நெல்லை மேல்நிலைப்<br>பள்ளி<br>நல்லூர் | 176 | ஆறுதல் பரிசு | 10-00 |
| 10. | க. கோமளா<br>தூய வளனார் மேல்நிலைப்<br>பள்ளி<br>நெய்வேலி | 176 | ,, | 10-00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 11. | தி.வெ. உமா<br>புனித பிலோமினாள் மகளிர்<br>மேல்நிலைப் பள்ளி<br>திண்டிவனம் | 176 | ஆறுதல் பரிசு | 10-00 |
| 12. | என். சுரேஷ்பாபு<br>சு.சா. மேல்நிலைப் பள்ளி<br>ஆரணி | 176 | ” | 10-00 |
| 13. | எஸ்.கே. சுமதி<br>என்.எல்.சி. மகளிர் மேல்நிலைப்<br>பள்ளி<br>நெய்வேலி-3 | 176 | ” | 10-00 |
| 14 | பா. வேல்முருகன்<br>கலவைக் கல்லூரி அரசு மேல்<br>நிலைப் பள்ளி<br>புதுச்சேரி-1 | 176 | ” | 10-00 |
| 15. | என். மகேஷ்<br>டி வி.எஸ். மேல்நிலைப் பள்ளி<br>மதுரை-11 | 176 | ” | 10-00 |
| 16. | என்.எம் மேகலா<br>நிர்மலா மகளிர் மேல்நிலைப்<br>பள்ளி<br>மதுரை-9 | 176 | ” | 10-00 |
| 17. | எஸ். சையத்தாவுத் காதரி<br>தியாகராசர் நன்முறை மேல்-<br>நிலைப் பள்ளி<br>மதுரை-9 | 176 | ” | 10-00 |

## தமிழ்த் தேர்வு பற்றிய அறிவிப்பு

பேரன்புடையீர், வணக்கம்.

பாலவநத்தம் குறுநில மன்னர் வள்ளல் பாண்டித்துரைத் தேவரவர்கள், புகழ்பெற்ற இந்நான்காம் தமிழ்ச் சங்கத்தை கூடல்

மாநகரில் 1901-ஆம் ஆண்டு நிறுவினார்கள். தேவரவர்கள் இந்நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவியதன் நோக்கம் மிக உயர்நததாகும். பாண்டிய மன்னர்களால் தோற்றுவிக்கப்பட்ட முதல், இடை, கடைச் சங்கக் காலங்களில் செந்தமிழ் சிறப்புற்று விளங்கியது. அதன் வழியில், தமிழில் சிறந்த புலமை பெற்றவர்களை உருவாக்க எண்ணிய தேவரவர்கள். இந்நான்காம் தமிழ்ச் சங்கம் வாயிலாக, தமிழ்க் கல்லூரி ஒன்றை நிறுவினார். இன்றைக்குக் கவிஞர்களாகவும் தமிழ் அறிஞர்களாகவும் இருப்பவர்களில் பலர் இக்கல்லூரியில் தங்கி முறையாகக் கல்வி பயினறு பண்டித என்னும் பட்டத்தைப் பெற்றவர்களாவர்.

பாண்டித்துரைத்தேவர் அவர்களுக்குத் திருவுருவச்சிலை :

பாண்டித்துரைச்சாமித்தேவர் அவர்கள் பழம்பெரும் மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவித் தமிழ் வளர்த்த தொண்டினை நினைவு கூறும் வண்ணம், அன்னாரின் திருவுருவச் சிலையை மதுரையின் மையப்பகுதியில் நிறுவி தமிழக அரசு சிறப்புச் செய்துள்ளது.

சான்றிதழும், சிறப்புப் பரிசும் :

பொதுத்தேர்வில் மாணவர்கள் தமிழில் தோல்வி அடைந்து விடக்கூடாது என்ற உயர்ந்த எண்ணத்தில் பாண்டித்துரைத் தேவரவர்கள் தொடங்கிய தமிழ்த்தேர்வு, கடந்த 85 ஆண்டுகளாக சிறப்புடன் செவ்வனே நடத்தப் பெற்று வருகிறது. இத்தேர்வில் ஆண்டு தோறும் ஆயிரக்கணக்கான உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் கலந்துகொண்டு பெரும் பயன்பெற்று வருவதைத் தமிழ் அன்பர்கள் நன்கு அறிவார்கள்.

உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு அரசு வகுத்துள்ள தமிழ்ப்பாடப் பகுதிகளே தமிழ்ச் சங்கத் தமிழ்த் தேர்விற்கும் உரிய பாடப் பகுதிகளாகும். அரசு எம்முறையில் வினாக்கள் அமைத்துத் தேர்வுகள் நடத்துகின்றனவோ அம்முறையிலேயே தமிழ்ச் சங்கமும் வினாக்கள் அமைத்துத் தேர்வு நடத்தி வருகின்றது. பொதுத் தேர்விற்கு [Publig Examination] முன்னதாகவே தமிழ்ச் சங்கம் தேர்வினை நடத்தி, மாணவர்களுக்கு அவர்கள் பெற்றுள்ள மதிப்பெண்களைத் தெரிவித்து வருகின்றது.

அதனால் மாணவர்கள் தங்கள் நிலையினை உணர்ந்து பொதுத் தேர்விற்கு நன்முறையில் தங்களைத் தயார் செய்து கொள்ள தமிழ்ச் சங்கத் தேர்வு வாய்ப்பளிக்கிறது.

தேர்வின் அமைப்பும் பயனும் :

தமிழ்ச் சங்கத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்கட்கு அவர்கள் பெற்று உள்ள மதிப்பெண் அடிப்படையில் சான்றிதழ் அளிக்கப்படுகின்றன. ஒவ்வொரு உயர்நிலைப்பள்ளியிலும், மேல்நிலைப்பள்ளியிலும் முதன்மையாகத் தேர்ச்சிபெறும் மாணவர்கட்குப் பரிசாக நூல்கள் வழங்கப்படுகின்றன. மாநில அளவில் முதல் மூன்று நிலையில் தேர்ச்சி பெறுபவர்களுக்கும், பாராட்டும் அளவிற்கு மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெறுபவர்களுக்கும் ரொக்க பரிசுகள் அளிக்கப்படுகின்றன. அம்முறையில் சென்ற ஆண்டு மட்டும் முப்பத்தெட்டு மாணவர்கள் ரொக்கப்பரிசினைப் பெற்றுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துகொள்கிறோம். தமிழ்ச் சங்கச் சான்றிதழ் பெற்றிருப்பவர்களுக்குத் தனிப்பட்ட சிறப்பும், பெருமையும் என்றும் உண்டு,

தேர்வு நாள், தேர்வுக் கட்டணம் :

| | தேர்வு நாள் | தேர்வுக் கட்டணம் |
|---|---|---|
| பத்தாம் வகுப்பு | 14—2—1987 | ரூ. 4 - 25 |
| பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தமிழ் | 7—2—1987 | ரூ. 4 - 25 |
| ,, சிறப்புத்தமிழ் | 9—2—1987 | ரூ. 2 - 25 |

அன்பளிப்பு :

விடைத்தாள் திருத்துவதற்குரிய அன்பளிப்புத் தொகை தாள் ஒன்றிற்கு பின்வருமாறு மிக உயர்ந்த அளவிற்கு கொடுக்கப்பட்டுவருகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

| | |
|---|---|
| பத்தாம் வகுப்பு | ரூ. 1 - 00 |
| பன்னிரண்டாம் வகுப்பு | ரூ. 1 - 00 |
| ,, சிறப்புத்தமிழ் | ரூ. 1 - 00 |

இவ்வன்பளிப்பு உயர்வு தமிழ்த்துறையைச் சேர்ந்த ஆசிரியப் பெருமக்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் என்பதில் நாங்கள் பெருமைப்படுகிறோம்.

அன்பு வேண்டுகோள் :

தேர்வினைக் குறித்த காலத்தில் செவ்வனே நடத்திட தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையை முன்கூட்டிய அறிந்திட வேண்டிய கட்டாய சூழ்நிலையில் இருக்-க்ன்றோம். ஆகையால் இவ்வறிக்கையைத் தாங்கள் படித்த உடன் உங்கள் பள்ளியில் இருந்து கலந்து கொள்ளும் மாணவர்-களின் எண்ணிக்கையை இதற்கு முன் அனுப்பாது இருப்பின் தோராயமாகக் குறித்து அனுப்பும்படி அன்புடன் கேட்டுக்கொள்-கிறோம்.

உங்களிடமிருந்து தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்-களின் எண்ணிக்கையைத் தெரிவிக்கும் கடிதம் கிடைத்தவுடன் மாணவர்களின் எண்ணிக்கைக்குத் தேவையான (1) மாணவர் பெயர்ப் பதிவுப்பட்டியல் (2) வரவுச் செலவுப்பட்டியல் (3 விடைத்-தாள் திருத்த விரும்பும் ஆசிரியர் பெயர்ப் பட்டியல் (4) கால அட்டவனை, தேர்வுக் கட்டண விபரம், தேர்வுச் செலவிற்குப் பிடித்துக் கொள்ளும் தொகை விபரப் பட்டியல் முதலியன அனுப்பி வைக்கப்படும்.

ஏதாவது ஒரு சூழ்நிலையில் உங்கள் மாணவர்கள் இவ்-வாண்டு தேர்வில் கலந்து கொள்ள இயலவில்லை யென்றாலும் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்,

தமிழ்ச் சங்கத் தேர்வு நடத்திட அரசு அனுமதி :

அரசு ஆணை R. Dis 166528 / 65 Dated 22-12-65 என்ற ஆணையின் (G.O) மூலம் மதுரைத் தமிழ்ச் சங்கத் தமிழ்த் தேர்வினை கல்வி நிலையங்களில் நடத்திக் கொள்வதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

## தேர்வுநாள், கட்டண விபரம் :

| வகுப்பு | தேர்வுக்கட்டணம் | தேர்வுநாள் |
|---|---|---|
| பத்தாம் வகுப்பு | ரூ. 4—25 | 14 - 2 - 1987 |
| பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தமிழ் | ரூ. 4—25 | 7 - 2 - 1987 |
| சிறப்புத்தமிழ் | ரூ. 2—25 | 9 - 2 - 1987 |

**கட்டணம் அனுப்ப வேண்டிய இறுதி நாள் 7 - 1 - 1987**

### தேர்வு நடத்துவதற்காகப் பிடித்துக் கொள்ள வேண்டிய செலவுத் தொகை விபரம்

10 மாணவர்களுக்கு மேல் தேர்வெழுதும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் மொத்தத் தேர்வுக்கட்டணத் தொகையில் பதினைந்து விழுக்காடு (15%) தேர்வுச் செலவிற்காகப் பிடித்துக் கொண்டு மீதித் தொகை முழுவதையும் சங்கத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். 10 மாணவர்களுக்குக் குறைவாகத் தேர்வில் கலந்து கொள்ளும் பள்ளிகள் செலவுத் தொகை ஏதும் பிடித்துக் கொள்ளாமல் முழுத்தொகையினையும் சங்கத்திற்கு அனுப்ப வேண்டும். தேர்வு நடத்தும் வகையில் ஆகும். அனைத்துச் செல-விற்கும் நாங்கள் குறிப்பிட்டுள்ள இத்தொகைக்கு மேல் செல-வானால் அத்தொகையை மாணவர்களிடமிருந்து வசூல் செய்து கொள்ளலாம். குறிப்பிட்டுள்ள செலவுத் தொகைக்கு மேல் செலவு ஆகாதபடி தேர்வு மேற்பார்வையாளர்களுக்குரிய அன்பளிப்புத் தொகையினைக் கட்டுப்படுத்தும்படி அன்புடன் கேட்டுக் கொள் கிறோம். மாணவர் பெயர்ப்பட்டியலோடு விடைத்தாள் திருத்த

விரும்பும் ஆசிரியர் பட்டியல் வரவு செலவு பட்டியல் முதலியவற்றையும் இணைத்து அனுப்பவேண்டும்.

கூடுமான வரையில் தேர்வுச் கட்டணத்தை வரைவோலை (Draft) அல்லது காசோலை (Cheque) மூலம் அனுப்பவும். வரைவோலையினை எந்த வங்கியில் வேண்டுமானாலும் பெற்று அனுப்பலாம். பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கான தேர்வுக் கட்டணத்தை தனித்தனி வரைவோலை (Draft) மூலம் அனுப்ப வேண்டும்.

தேர்வுக் கட்டணமும், தேர்வு பற்றிய குறிப்புகளும்
அனுப்ப வேண்டிய முகவரி

செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை - 625 00

இந்நான்காம் தமிழ்ச் சங்கத்தின் நற்பணிகள் நாளும் செழிக்க உங்களுடைய ஒத்துழைப்பின் மூலம் எங்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும்படி சான்றோர் பெருமக்களை அன்போடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

சேதுபதிமகாராணி — தங்களன்புள்ள

த. இந்திராதேவி
தலைவர்

என். எஸ். முத்துமலைச்சாமி
செயலாளர்.

5013